# அறிவகம்

## வெள்ளி விழா மலர்

அறிவகம் சனசமூக நிலையம்

தென் புலோலி,

புலோலி.

**10 - 8 - 80**

போன்: 567

# கலாவதி நகை மாளிகை

**தங்க நகை வியாபாரிகள்.**

உரிமையாளர்: **திருமதி. ஐ. இரத்தினசிங்கம் அன் சன்ஸ்**

## அழகிற் சிறந்த தங்க நகைகளுக்கு தகுந்த இடம்




**ஓடர் நகைகள்**

குறித்த காலத்தில் உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

**239, பிரதான வீதி, - பருத்தித்துறை.**

ஆன்றோர் புகழும் அறிவகமே ஆன்ற புவிச்
சான்றோர்கள் வாழ்ந்தவித் தாரணியில் — நன்றுபல
குன்றமெறிந்த குமரன் அருளாலே
என்றுமே செய்வாய் இயைந்து.






# வெள்ளி விழாக் காணும் அறிவகம்

★ சன சமூக நிலையம் ★

உ

சிவமயம்

# அறிவகம்

## வெள்ளி விழா மலர்.

மலராசிரியர்:

திரு. சி. இரத்தினம்

மலர்க் குழு:

திரு. க. இராசலிங்கம்

திரு. த. கமலநாதன்

திரு. இ. பத்மநாதன்

திரு. மு. ஆனந்தராசா

திரு. ப. குணநாயகம்


அறிவகம் சனசமூக நிலையம்,

தென்புலோலி.

ரௌத்திரி ஆண்டு ஆடித்திங்கள் 26-ம் நாள்

10-8-80

# துதி.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

(ஔவையார்)

கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றூர் வாழ்தில்லைச் சிற்றம்பல மேய
முற்றுவெண் திங்கள் முதல்வன் பாதமே
பற்று நின்றுரைப் பற்று பாவமே

(அப்பர் தேவாரம்)

முருகன் தனிவேல் முனிநங் குருவென்று
அருள்கொண்டு அறியார் அறியுந் தரமோ
உருவன்று அருவன்று உளதன்று இலதன்று
இருளன்று ஒளியன்று என நின்றதுவே.

(கந்தர் அநுபூதி)

பொன்னரசி, நாரணனுர் தேவி, புகழரசி
மின்னு நவரத்தினம் போல்மேனி யழகுடையாள்
அன்னையவள் வையமெலாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னிரு பொற்றுளே சரண்புகுந்து வாழ்வோமே.

வாணி கலைத்தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணிமுத்தைப் போலே அறிவுமுத்து மாலையினுள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெல்லாம் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே.

# அறிவகம் வாழ்க! வாழ்க!!

நறுந்தமிழ் மணக்கும் தூய
நற்குல மக்கள் வாழும்
செறிகலைச் செல்வம் மற்றும்
செம்பொருள் யாவும் மேவும்
அறிவுடைத் தென் புலோலி
அன்பர்தம் அறிவைக் கூட்டும்
அறிவகம் வாழ்க வாழ்க
அனைத்துமே வாழ்க நன்றே.

கவிஞர்:
காரை. செ. சுந்தரம்பிள்ளை
(பி. ஏ. இலண்டன்)

ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தின் சபாநாயகர்

மாண்புமிகு

# அல்ஹாஜ். எம். ஏ. பாக்கீர் மாக்கார் அவர்கள்

"அறிவகம்" சனசமூக நிலையத்தின் வெள்ளிவிழா மலருக்கு எனது ஆசியையும், நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். சமுதாய வளர்ச்சிக்கும், ஆன்ம ஈடேற்றத்துக்கும் ஒரு திறவுகோல்தான் அறிவு. இருள் சூழ்ந்து சுருங்கியிருந்த சமூகங்கள் பல இன்று ஒளிபெற்று பரந்து வீறுநடை போடுகின்றன வென்றால் அதற்கு வழிவகுத்தது அறிவு

"அறிவு எங்கு கிடைப்பினும் அதைத்தேடிப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்பது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருள்வாக்காகும். கல்வியை நாடி அறிவைத் தேடிக் கொள்ளுங்கள் என்பதுதான் உலகிலுள்ள எல்லாச் சமயங்களுமே போதிக்கின்ற ஒரு பேருண்மை. இந்த வகையிலே எமது நாட்டிலுள்ள சனசமூக நிலையங்கள் ஆற்றுகின்ற சேவைகள் அனந்தம். அரசாங்கமும் இவற்றுக்கென வேண்டிய பண உதவிகளை அளித்து வருகின்றது.

உங்கள் "அறிவகம்" சனசமூக நிலையம் சமூகத்திலேயுள்ள குறைபாடுகளை நீக்கி மக்களிடையே விழிப்புணர்ச்சியையும், ஒற்றுமையையும் எல்லாவற்றுக்கும் மேலாக ஒழுக்கத்தையும் ஏற்படுத்த முன்னின்று பாடுபடல் வேண்டும். இதுவே எனது அவாவாகும்

உங்கள் நிலையம் இறைவன் அருளால் எல்லாத்துறைகளிலும் முன்னேறி சமூகத்தின் மேம்பாட்டுக்காக உழைத்து இலங்கையிலுள்ள ஏனைய சனசமூக நிலையங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கவேண்டுமென வாழ்த்துகிறேன்.

சபாநாயகர் அலுவலகம்
10—7—80

உடுப்பிட்டித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்

## திரு. த. இராசலிங்கம் அவர்கள்

அறிவகம் கடந்த பல ஆண்டுகளாக ஆற்றிவரும் சேவைகளை நான் அறிவேன். எனவே அறிவக வெளியீடாக வரும் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன். நல்ல பல பெருமக்களைக் கொண்டதாக யாழ் குடாநாட்டில் தென்புலோலியூர் விளங்கி வந்திருக்கின்றது. அத்தகைய ஒரு கிராமத்தில் மக்கள் அறிவகம் நிறுவி தமிழ் மக்களது கலை கலாச்சாரத்தைப் பேணிப் பாதுகாத்து வெள்ளி விழாக் கொண்டாடுவது குறித்து நான் மட்டுமல்ல தமிழ் அன்னையே பெருமையடைகிறாள்.

அறிவகம் என்ற வார்த்தை எனக்கு அண்ணாவை ஞாபகப் படுத்துகிறது. அவர் அறிவகங்கள் மூலமே தமிழகத்தின் அறியாமையைப் போக்கப் பாடுபட்டார். தமிழ் மொழியின் தொன்மையையும், மேன்மையையும் விளக்கினார். தமிழ் நாடகக் கலைக்குப் புதுவாழ்வு கொடுத்தார். மக்களிடையே சீர்திருத்தக் கொள்கைகளையும் பொதுவுடைமைத் தத்துவத்தையும் பரப்பினார், மூடக் கொள்கைகளை வேரறுத்தார். இப்படியாக அவர் அறிவகங்கள் மூலம் செய்தவை ஏராளம்! ஏராளம்!

தென்புலோலியூர் அறிவகமும் இயல், இசை, நாடகத் தமிழை வளர்க்கவும், தமிழ் மக்களிடையே அறிவைப் புகுத்தவும், சமத்துவத்தை நிலை நாட்டவும், உரிமைகளைப் பாதுகாக்கவும், விளையாட்டுக்கள் மூலம் ஒற்றுமையைப் பலப்படுத்தவும் முயன்று வருவதை எல்லோரும் அறிவார்கள். இத்துறையில் இந்த அறிவகம் தினந்தோறும் உதய சூரியனைப் போல் பிரகாசித்துச் சிறப்புறப் பணியாற்ற வேண்டுமென வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறேன்.

அல்வாய்.
8-6-80

தேசியப் பேரவை முன்னாள் நியமன உறுப்பினர்

## திரு. எம். சி. சுப்பிரமணியம் அவர்கள்

புலோலி தெற்கு "அறிவகம்" சனசமூக நிலையம் தனது 25-வது வருட வெள்ளி விழாவைக் கொண்டாடும் முகமாக வெளியிடும் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் யான் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மேற்படி சனசமூக நிலையம் கடந்த 25 ஆண்டுகளாக இப்பகுதி மக்களுக்கு சீரிய பணியாற்றிவந்ததையிட்டு யான் பெருமிதமடைகின்றேன்.

வருங்காலத்திலும் இச்சனசமூக நிலையம் இப்பகுதி மக்களின் சமூக முன்னேற்றம் கலை கலாச்சார, மறுமலர்ச்சி, பொருளாதார அபிவிருத்தி முதலிய துறைகளில் அயராது உழைத்து சிறப்பான பணிபுரிய வேண்டுமென்றும் வாழ்த்துகின்றேன்.

யாழ்ப்பாணம்.
4-6-80

நல்லூர்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்

## திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள்

தென்புலோலி "அறிவகம்" சனசமூக நிலையம் 25 ஆண்டுகள் சிறப்பாக இயங்கி வெள்ளி விழா காணும் இந்த நல்ல நேரத்தில் எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

"முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும்" முருகன் ஆலயம் கொண்டதற்கு அருகாமையில், பொருத்தமாக இந்த சனசமூக நிலையம் அமைந்துள்ளது. முத்தமிழை வளர்ப்பதில் முன்னின்று உழைத்த இந்த சனசமூக நிலையத்தின் நிர்வாகஸ்தர்களை மனமாரப் பாராட்டுகிறேன்.

"அறிவே அரண்" என்பது அறிஞர் அண்ணாவின் தாரக மந்திரம். அதுவும் மக்கள் ஆட்சி நடக்கும் ஒரு நாட்டில் அறிவே மக்களின் முதல் தேவை. அரசியல், பொருளாதார சமூக வளர்ச்சிக்கு மக்களின் அறிவு வளரவேண்டும் இந்தத் துறையிலும் பெரும்பணி ஆற்றிய இந்த சனசமூக நிலையத்தின் தலைவர்களை மனமாரப் பாராட்டுகிறேன்.

மேலும் பல நற்பணிகள் ஆற்றி ஊரும், மக்களும் ஓங்கி வளர எனது நல்லாசிகள்.

நல்லூர்
18—6—80

★

பருத்தித்துறைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்

## திரு. கே. துரைரத்தினம் அவர்கள்

அறிவகம் சனசமூக நிலையம் தனது இருபத்தைந்து வருட சேவையைக் குறிக்குமுகமாக வெள்ளி விழா கொண்டாடுவதை நான் பாராட்டாமல் இருக்கமுடியாது. நூல் நிலையம், கலை, கலாச்சார நிகழ்ச்சிகள், விளையாட்டுக்கள் என்பவற்றைத் தொடர்ந்து நல்ல முறையில் நடாத்தி மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியதோடு, வாலிபரை ஆக்கமான முயற்சிகளில் ஈடுபடுத்தியதும் அறிவகத்தின் சாதனை என்பதனை நான் அறிவேன் கால் நூற்றாண்டுகாலமாக அறிவகம் தொண்டாற்றி வருவது போற்றத்தக்கது. இந்நிலையம் தொடர்ந்து இப்பகுதி மக்களுக்கு சேவைசெய்ய வேண்டுமென இறைவனை வேண்டிக் கொள்வதுடன் "வெள்ளிவிழா மலர்" அறிவுக்கும். உணர்ச்சிக்கும் விருந்தாகச் சிறந்த முறையில் வெளிவரும் என நம்புகிறேன். அதற்கு எனது நல்வாழ்த்துக்கள்.

பருத்தித்துறை.
20—7—80

முன்னாள் உடுப்பிட்டித் தொகுதி தேசிய பேரவை உறுப்பினர்

## திரு. க. ஜெயக்கொடி அவர்கள்

அரசியல் மோதல்கள், அநீதிகள், இனப் புறக்கணிப்புக்கள், வகுப்பு வேற்றுமைகள், சாதிப் பாகுபாடுகள் அத்தனையும் மலிந்து கிடக்கின்ற இந்த நூற்றாண்டில், அறியாமையை நீக்கவும், பொருளாதார ஏற்றத்தாழ்வை அகற்றவும் தன்மான உணர்ச்சியை உண்டாக்கவும், தமிழ் ஈழத்தில் எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற உண்மையை உறுதிப்படுத்தவும், கால் நூற்றாண்டு காலமாக இடையறாது "அறிவகம்" சனசமூக நிலையம் பணியாற்றி வருவதைக் கண்டு பெருமைப் படுகின்றேன்.

பசியினால், தாக்கத்தினால், கசத்தினால், பேதியினால் மாண்டு மடியும் மக்களை விட மதியீனத்தினால், அறியாமையால், சிந்தனையற்ற கட்டைத்தனத்தினால், தாழ்வு மனப்பான்மையால் மாண்டு கொண்டேயிருக்கும் மனிதர்கள் அதிகம் உண்டு என்னும் உண்மையை உணர்ந்து தம் மக்களின் அக இருளை நீக்க, அறிவை வளர்க்க அங்கத்தவர் வாழ் வாங்கு வாழ அரும்பாடு பட்டு அறிவகம் செயல்படுவது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, உரிமை இழந்த மக்களுக்கு விடிவிளக்காகவும், இது போன்ற பல சனசமூக நிலையங்களுக்கு முன் மாதிரியாகவும், பட்டம் பதவிக்கோ சுய நலத்துக்கோ அன்றி சேவை மனப்பான்மையோடு செயலாற்றும் நிர்வாகத்தினரை உடையதுமான தென்புலோலி அறிவகம் சனசமூக நிலையம் தொடர்ந்து, இடையறாது, செயலாற்றும் என்ற நம்பிக்கையோடு என் பணிவான வாழ்த்துக்கள் உரித்தாகுக.

வணக்கம்.

10-7-80

வடமராட்சி (வடக்கு/கிழக்கு) உதவி அரசாங்க அதிபர்

## திரு. வை. வேலும்மயிலும் அவர்கள்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

தென்புலோலியில் அமைந்திருக்கும் அறிவகம் சனசமூக நிலையம் தனது வெள்ளிவிழாவைக் கொண்டாடப்போகின்றது என அறிந்து மிக மகிழ்ச்சி அடைகிறேன். நான் கரவெட்டியில் பணியாற்றும்போதும் பின்னரும் அறிவகத்தாரின் உற்சாகத்தை யும், ஆர்வத்தையும் நேரடியாக காணும் வாய்ப்புக்கள் கிடைத்தன.

சமூக புத்துணர்வுக்கும், மேம்பாட்டிற்கும் மக்கட்கு தரமான வாழ்க்கை நிலையை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற பேரவாவும் இந் நிலையத்தாரின் குறிக்கோள்கள்.

இவை இனிது நிறைவேற எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
பருத்தித்துறை.
25—5—80.

புலோலி கிராமசபை விசேட ஆணையாளரும்,
உதவி சமூக சேவைகள் பணிப்பாளருமாகிய

## திரு. க. கங்காதரன் அவர்கள்

தென்புலோலியூர் அறிவகம் சனசமூக நிலையத்தார் வெள்ளிவிழாக் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். கலை. கலாச்சார வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றிவரும் இந்நிலையம் வளர்ந்துவரும் இளம் சந்ததியினரின் சவால்களை எல்லாம் சமாளித்து புதிய சிந்தனைச் செறிவுடன் புதிய யுக்திகளைக் கையாண்டு மேலும் பல ஆக்கபூர்வமான அரும்பணிகளைப் புரிந்து சிறப்புற்று வளரவேண்டுமென வாழ்த்துகிறேன்.

கடின உழைப்பும், இடையரு முயற்சியும் கண்டிப்பாகத் தேவையாய் இருக்கின்ற இக்காலத்தில் இத்தகைய நிலையங்கள் கட்டுப்பாட்டோடும் உயர்ந்த பண்புடனும் யாவரையும் நெறிப்படுத்தி, எமது சமூகத்தின் நலத்திற்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கும் என்ற நம்பிக்கையுடன் தங்கள் விழா சிறப்புற வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

புலோலி கிராமசபை அலுவலகம்
4—7—80.

புலோலி தெற்கு கிராமசேவையாளர்

## திரு. க. வேலாயுதபிள்ளை அவர்கள்

அறிவு ஒளிர்ந்தே அன்பு மிளிர்ந்திட
அறமது தழைத்தே அருள்மிகக் கனிந்திட
உண்மையை ஓம்பி உழைப்பால் உயர்ந்து
தண்மைத் தயவுடன் தமிழினம் உய்திட
இன்னலோ இடரோ எதிர்ப்போ வரினும்
துன்பமே தொடர்ந்து தொல்லை தரினும்
உறுதியால் உயர்ந்த குறிக்கோள் அடைந்திட
அறவழி சென்றே அயரா துழைத்திட
அறிவகம் சார்ந்த அனைவர்க்கும் அருளை
இறைவன் ஈவான் இன்பம் பொங்கவே!

கிராமசேவை அலுவலகம்,
புலோலி
23—6—80.

தும்பளை கிராமசேவை அலுவலர்

## திரு. விநாசித்தம்பி சேதுநாயகம்

## அவர்கள்

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஒருங்கே அமைந்த அறிவகம் சனசமூக நிலையம் திருமுருகையன் கோவிலடி மக்களுக்குப் பல நன்மைகள் செய்து மேன்மேலும் ஓங்கி வளர்ந்து பொன்விழா காணும் பாக்கியம் பெற்று நீடூழி வாழ்க! வாழ்க!! என வாழ்த்துகிறேன்.

கிராமசேவை அலுவலகம்
தும்பளை
20 - 6 - 80

கிராமசேவை அலுவலர்

## திரு. செ. ஜெகநாதன் அவர்கள்

பொன்விளையும் பூமி, புகையிலையும் வெண்காயமும் விளையும் பூமி, பொய்யாப் புலவர்கள் வாழ்ந்த, வாழ்கின்ற, வாழப்போகும் பூமி இந்தத் தென்புலோலி. ஒரு சாதாரண மனிதன் தன் கடமையை எப்படிச் செய்கின்றான் என்று அறிவதற்கு எடுத்துக்காட்டு ''அறிவகம்'' தான். 1964-ஆம் ஆண்டு தொடக்கம் அறிவகத்தை அறிந்து கொண்டேன் அன்று தொடக்கம் ஆயிரம் ஆயிரம் மக்களுக்கு அறிவகத்தின் ஆற்றலை எடுத்துரைப்பேன் அறிவகம் சனசமூக நிலைய அங்கத்தவர்கள் அறிவாளிகளா ஆற்றல் படைத்தவர்களாக அமையட்டும்; அழகு தமிழில் புதுமைக் கவிதை புனைந்து புகழ் பரப்பட்டும்; புலோலி ஊரில் ''அறிவகம்'' நிலைத்து நிற்கட்டும் என வாழ்த்துகிறேன்.

கிராமசேவை அலுவலகம்,
புலோலி கிழக்கு.

# வெள்ளியிற் பூத்த மலர்

"அறிவகம்" எமது மக்களின் அறிவுத் துறை சார்ந்த உயர்வை இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்ட தாபனம் என்பதனை அப்பெயரின் கண் பொதிந்துள்ள உள்ளார்ந்த கருத்தே உணர்த்தும்.

அறிவுத் துறையில் மிகவும் பின் தள்ளப்பட்டுக் கிடந்த மக்கள் மத்தியில் அறிவு வளர்ச்சியினையும் அவ்வளர்ச்சியினூடே கலை, கலாச்சார, பண்பாட்டுப் போக்கினையும் செப்பனிடுவதே இத்தாபனத்தின் பெருநோக்கமாக ஆரம்பகாலம் முதல் இருந்து வருகிறது.

கடந்த கால் நூற்றுண்டு காலமாக இவ்விலக்கினைச் சென்றடையும் போக்கில் அறிவகம் செயற்பட்டதன் பேருக நாம் பெற்றுள்ள பெறுமானங்களை மதிப்பீடு செய்யும் வண்ணம் அறிவகத்தின் தோற்றம், வளர்ச்சி, செயற்பாடு, விளைவுகள் என்பனவற்றைத் தொகுத்து வழங்க வேண்டுமென்னும் சிந்தனையின் வெளிப்பாடே இம் மலராகும்.

எமது சமுதாயத்தின் சீரிய பண்புக் கூறுகளைக் கட்டிக் காக்கவல்ல பழமைகளைப் போற்றுவதோடமையாது காலத்துக்குகந்த புதுமைகளையும் புகுத்தி முன்னேற்றப் பாதையின் துரிதவளர்ச்சிப் போக்கினை எய்தவும் திடசங்கற்பம் பூண்டு செயற்பட வேண்டிய கடப்பாடும் எங்கள் முன் உண்டென்பதனை நாம் அறிவோம்

இச் சந்தர்ப்பத்தில் கடந்த காலத்தில் எமக்கு ஊக்கமும், ஆக்கமும் அளித்து ஆலோசனைகள் நல்கி எம்மை வழி நடாத்திச் சென்ற எம்மவர்களின் பகுத்தறிவு, ஆற்றல், பெருந்தன்மை, தாராண்மை என்பனவற்றை உளத்திருத்தி, சிரந்தாழ்த்தி அப்பெருமக்களை நன்றியோடு நினைவு கூருகின்றோம்.

வெள்ளி விழா மலரொன்று எவ்வாறு இதழ் பரப்ப வேண்டுமென்பது பற்றிய எமது அறிவு பூர்வமான உள்ளார்ந்த நோக்கமும் பேரவாவும் முழுமை பெறும் வண்ணம் எமது இலக்கின் பிரதான அம்சங்களை உள்ளடக்கியதாக இந்த மலரை மணம் பரப்பச் செய்துள்ளோம் என்பதில் நம்பிக்கையும், மகிழ்ச்சியும் அடைகின்றோம்.

இம்மலரின் பெறுமதியை உயர்த்தும் வண்ணம் வாழ்த்துரைகள் வழங்கியுள்ள பெருமக்கள், அரிய ஆக்கங்களை மனமுவந்தளித்து நல்மனம் பரவச்செய்துள்ள அறிஞர்கள், எமக்கு விளம்பரம் தந்து உதவிய வர்த்தகப் பெரும்மக்கள், குறுகிய காலத்தில் அழகிய முறையில் மலரை அச்சிட்டு உதவிய குமார் அச்சக உரிமையாளர், உழைக்கும் தொழிலாள நண்பர்கள் அனைவரும் எமது நன்றிக்குரியவராவர்.

அறிவகம் ஆயிரங்காலத்துப் பயிர். இவ் வெள்ளி விழாவின் தொடர்ச்சியாகப் பல நூற்றுண்டு விழா மலர்களை மலர்வித்து மகிழ்ந்து கொள்ளப் போகின்ற ஒரு தாபனம் அம்மலர்களை எல்லாம் சூடிக்கொள்ளும் அரும்பேற்றினை அருள் பாலிக்கும் வண்ணம் வல்ல வேல்முருகனை இறைஞ்சி இம் முதல் மலரை — வெள்ளியிற் பூத்த மலரை — அவன் தாள்களிற் சமர்ப்பித்துப் பணிகின்றோம்.

சி. இரத்தினம்
மலராசிரியர்.

# அறிவகத்தின் தோற்றமும் வளர்ச்சியும

ஈழமணித் திருநாட்டிலே யாழ்நகரின் வடகிழக்காக பருத்தி ஊர் அமைந்திருக்கிறது. அங்கு புகழுடன் விளங்கும் புலோலிக் கிராமத்தில் மந்திகை என்னும் இடத்தில் முருகையா கோவில் அருகாமையில் அமைந்திருக்கும் சனசமூக நிலையமே அறிவை அள்ளி அளிக்கும் அறிவகம் சனசமூக நிலையமாகும்.

இவ்விடத்தில் முற்காலம் தொடக்கம் மக்கள் கல்வியறிவுடையோராக விளங்கினர். சாஸ்த்திரம், வைத்தியம், மாந்திகம் போற்றவற்றில் குறைமையுள்ளவர்களாக விளங்கினர் இலங்கையில் பாடசாலை முறை வரமுன்னர் திண்ணைப்பாடசாலை அமைத்துப் படிப்பித்த காலத்திலும் இங்கும் திண்ணைப் பள்ளிமுறை இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது உதாரணமாக இவ்விடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி என்னும் பெரியார் திண்ணைப் பாடசாலையில் கல்வி போதித்தவர். அவரை ஊரவர் சட்டம்பியார் என்று சிறப்புடன் அழைப்பார்களாம்.

1950 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இளம்பிள்ளைகள் தங்கள் ஓய்வு நேரங்களை ஓரிடத்திலிருந்து கல்வி கற்க விரும்பி எமது பெரியார் சபாபதியார் வீட்டுத் திண்ணையில் சிறு சிறு புத்தகங்களைக் கொண்டு வாசிகசாலை ஒன்றை நடாத்தினர். இதுவே ஒரு நிரந்தர வாசிப்பு நிலையம் ஏற்பட ஏதுவாயிற்று.

அதே கால கட்டத்தில் இவர்களிலும் சற்று வயதில் கூடிய இளைஞர்கள் தமது ஓய்வு நேரங்களை முருகையா கோவில் வீதிகளிலும், ஆலய வெளி மண்டபங்களிலும் இருந்து கதைத்துக் காலத்தைக் கழிப்பதும் வழக்கம். ஆனால் இதைக் கண்ணுற்றவர்கள் அவர்களை சோம்பேறிகள் என பகடிபண்ணலாயினர். அத்தகைய விமர்சனமும் வாசிகசாலை அமைவதற்கு உறுதுணையாக இருந்தது.

அதே காலகட்டத்தில் எங்களது ஊரில் அமைக்கப்பட்டிருந்த சங்கக் கொட்டகையில் திரு த. ச. மாணிக்கம் அவர்களின் அன்பளிப்பால் போடப்படும் பத்திரிகைகளை வாசிக்கும் பழக்கமும் ஏற்படலாயிற்று. இத்தகைய காரணங்களினால் எமது இளைஞர்கள் முருகையா கோவிலருகில் வாசிப்பதற்கு ஒரு கொட்டில் போட எண்ணினர். மரங்கள், தடிகள் பெரியார்களிடம் இனமாகப் பெறப்பட்டன. கப்பு ஒன்று போதாமைகண்டு விளாத்தி மரம் ஒன்றைத் தறித்து கப்பாகப் பாவித்தார்கள். இவ்வேளை நினைவில் கொள்ள வேண்டியவர்கள் திரு சி. குணரத்தினம், திரு பொ. அப்பையா, திரு மா செல்லத்துரை இவர்களுக்கு மேலும் உதவியவர்கள் திரு ச. தம்பிமுத்து, திரு ஆ சண்முகம், திரு சி. சுப்பையா இவர்களைவிட பெரியோர்களில் உதவியவர்களில் மு ச மாணிக்கம், மு. கணபதிப்பிள்ளை சாத்திரியார் போன்றவர்களின் உதவியைக்கொண்டே வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன திரு மு. வயிரமுத்து காலஞ்சென்ற மு. கிட்டிணர் அவர்கள் முன்நின்று வேலை செய்தனர்.

இத்தனையும் உருவாக்கப்பெற்றும் நிலையம் திறம்படாதுகண்டு கவலைகொண்ட இளைஞர் சி. இரத்தினம் பெரு முயற்சி எடுத்து ஆ. கணபதிப்பிள்ளை, சி. உருத்திரம் போன்றவர்களுடன் சேர்ந்து ஊரவரின் உதவிபெற்று நிலையத்தை இயங்கச் செய்தனர். அவர்களின் முயற்சியினால் நிலையம் 1955 ஆவணி மாதம் எமது சங்கத்தில் முன்பு பொருளாளராக இருந்த காலம்

சென்ற பெரியார் வ. ஆறுமுகம் அவர்களால் திறக்கப்பட்டு 2-10-57ல் பதிவுசெய்யப்பட்டது.

இப்படியே நிலையம் செயற்பட்டு வந்தபோது கற்கட்டடம் ஒன்றை அமைக்க விரும்பினார்கள் அத்திவாரம் போடுவதற்குரிய கல் அனைத்தும் த ச மாணிக்கத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்டது. ஆ. கணபதிப்பிள்ளையும், க. இராசலிங்கமும் இப் புதிய கட்டடம் கட்டப்படுவதற்கு உதவி செய்தார்கள். பணங்கள் போன்றவற்றையும் ஊரவர்கள் தந்து உதவினர். முன்போல் தச்சு வேலைகளையும் மு. வயிரமுத்துவும் அவரோடு பலரும் வேலைசெய்தனர். உறுப்பினர் பலர் சிரமதானமாக வேலை செய்தும், கட்டிடம் உருப்பெற்று செயல்பட்டது. இதுகாலவரை நிலையத்திற்கு பல பொருட்கள் உறுப்பினர்களினாலும் அன்பளிப்பு செய்யப்பட்டிருக்கின்றன. பத்திரிகைகளும் தங்கள் செலவின் மூலம். சிலர் போடுகின்றனர்.

எங்கள் நிலையத்திற்கு திருவாளர்கள் சி உருத்திரம், க. இராசலிங்கம், மா சதாசிவம் போன்றவர்களின் பெருமுயற்சியால் மற்றும் ஏனையோரின் உதவியுடன் 1964ல் ஓர் நிதி உதவிக்காட்சி நெல்லியடி லக்ஷ்மி தியேட்டரில் காண்பிக்கப்பட்டு நிதி உதவி பெற்றனர் அந்தக் காலத்திலேதான் புயல் காற்றினால் நிலையம் தரைமட்டமாக்கப்பட்டது ஆகவே, அதைத்திருத்தி அமைக்கத்தான் நிதியுதவிப் படத்தில் பெற்றுக்கொண்ட பணம் செலவு செய்ய முடிந்தது. எமது தேசியப் பேரவை உறுப்பினரின் பெருமுயற்சியால் அரசாங்கத்திடம் நிதியுதவிபெற்று நிலையம் விஸ்தரிக்கப்பட்டது.

எமது நிலையம் பொதுக்கூட்டங்கள் விழாக்களைவிட பல பெரியோரது நினைவுக்கூட்டங்களையும், பல சிறப்பு வைபவங்களையும் நடாத்திவந்திருக்கிறது. எமது நிலைய வீதியின் பெயர் கிராமசபையால் தங்கள் விருப்பப்படி வைக்கப்பட்டபோது இரண்டு மூன்று வருடங்களாகத் தொடர்ந்து போராடி வெற்றியும்கண்டது பல பொதுப் பணிகளிலும் சிரமதானங்களிலும் ஈடுபட்டிருக்கிறது சுகாதார சேவைகளிலும் அரசாங்க அதிகாரிகளுடன் ஒத்துழைத்திருக்கிறது. பல பிரேரணைகள் ஆக்கப்பட்டு அது சம்பந்தப்பட்டவர்களுக்கு அப்பியிருக்கின்ற அரசாங்க செய்திப்படங்களை வரவழைத்துக் காண்பித்திருக்கிறது.

இவற்றைவிட பன்னம் இழைத்தல் தொழில் பயிற்சியும் அரசாங்க ஆசிரியர்களினால் நிலைய உறுப்பினருக்கு பயிற்சியும் கொடுக்கப்பட்டது. எங்கள் நிலையத்திற்கு முன் தோட்டத்தொழில் அமைச்சர் கௌரவ அல்பேட் காரியவம்சர் அவர்கள் வருகைதந்திருந்தார்கள்.

எங்கள் நிலையத்தின் ஆண்டுவிழாக்களுக்குப் பல பெரியோர்களை அழைத்திருக்கிறோம். ஆண்டு விழாக்கள் ஆடி அமாவாசைத் தினத்தில் நடைபெற்று வெள்ளிவிழாவையும் காண்கின்றோம். ஆகவே, இத்துடன் நில்லாது மேலும் செயற்பட்டு மற்றும் பொன்விழா - வைரவிழாக்களையும் காண ஆண்டவன் அருள் வேண்டுகிறோம்.

தொகுப்பு :

திரு. க. இராசலிங்கம்

# அறிவகம் சனசமூக நிலைய நிருவாகிகள்.

| | தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|
| 1955-56 | — | மா. செல்லத்துரை | க. இராசலிங்கம் |
| 56-57 | — | மா. செல்லத்துரை | க. இராசலிங்கம் |
| 57-58 | சி இரத்தினம் | பொ. கனகசபை | க. இராசலிங்கம் |
| 58-59 | பொ. கனகசபை | சி. அதிஷ்டம் | க. இராசலிங்கம் |
| 59-60 | பொ. கனகசபை | மா. செல்லத்துரை | க இராசலிங்கம் |
| 60-61 | பொ. கனகசபை | மா செல்லத்துரை | சி. உருத்திரம் |
| 61-62 | பொ. கனகசபை | மா. செல்லத்துரை | சி. உருத்திரம் |
| 62-63 | க. இராசலிங்கம் | மா. செல்லத்துரை | ஆ. சின்னத்துரை |
| 63-64 | க இராசலிங்கம் | மா. செல்லத்துரை | ஆ. சின்னத்துரை |
| 64-65 | சி. சிவபாதம் | அ சீவரத்தினம் | ஆ சின்னத்துரை |
| 65-66 | சு. சுந்தரன் | கா. செல்வராசா | வ. சிவலிங்கம் |
| 66-67 | க. இராசலிங்கம் | க. தவயோகம் | ச. தம்பிமுத்து |
| 67-68 | சி. சிவப்பிரகாசம் | ப. ஜெனநாயகம்<br>கா. தங்கராசா | கா. ஜெயராசா |
| 68-69 | அ. நவரத்தினம் | மா. செல்லத்துரை<br>த பேரானந்தம் | சி. சிவப்பிரகாசம் |
| 69-70 | இ. உருத்திரம் | பொ கனகசபை<br>அ. நவரத்தினம் | சி சிவஞானம் |
| 70-71 | கா. செல்வராசா | ப குணநாயகம்<br>சி. சிவப்பிரகாசம் | இ பத்மநாதன் |
| 71-72 | க. இராசலிங்கம் | மா. செல்லத்துரை<br>கா. தங்கராசா. | ப. ஜெனநாயகம் |
| 72-73 | சி. உருத்திரம் | பொ கனகசபை<br>மா. அருட்செல்வம் | ப. ஜெனநாயகம் |
| 73-74 | அ நவரத்தினம் | இ பத்மநாதன்<br>சி. சிவப்பிரகாசம் | மா. ெல்லத்துரை |
| 74-75 | மா. அருட்செல்வம் | அ. செல்வரத்தினம்<br>கா. தங்கராசா | சு. சுந்தரன் |
| 75-76 | அ. பஞ்சரத்தினம் | கா. செல்வராசா<br>த. கமலநாதன் | கா ஜெயராசா |
| 76-77 | இ உருத்திரம் | சி. சிவப்பிரகாசம்<br>சி. சிவஞானம் | மா. தவச்செல்வம் |
| 77-78 | பொ. கனகசபை | கா. தங்கராசா<br>சி இரத்தினம் | ஆ. சின்னத்துரை |
| 78-79 | சு. சுந்தரன் | சி. சிவஞானம்<br>கா. செல்வநாயகம் | இ. பத்மநாதன் |
| 79-80 | மா. சதாசிவம் | பொ. கனகசபை<br>மா. அருட்செல்வம் | சி. உருத்திரம் |

# வெள்ளி விழா எடுக்கும் அறிவகம்

(சைவப் புலவர் சி. வல்லிபுரம்)

வாலிபர் பணியைப் போற்றி
வரும்வெள்ளீ விழாம லர்க்குக்
காலப்போக் கினில்மா ருத
கவிதையொன் றெழுத வெண்ணி
மேலைநாள் நிலையத் தார்செய்
விழுச்செயல் பலவ டக்கிச்
சாலவும் சுருக்க மாகத்
தருகிறேன் பொறுத்துக் கொள்வீர்.

இங்குபற் பலமுன் னேற்றம்
இயைந்திட அறிவ கத்தைத்
தங்களூர் முருகன் கோயிற்
சார்பினில் அமைத்து நல்ல
பொங்குவா சிகநற் சாலை
பொருவிலாச் சமயத் தொண்டு
மங்கிடாக் கலை வளர்ச்சி
மற்றுமே நடத்தி வந்தார்

மூத்ததென் புலோலி யூரில்
முருகையா கோயிற் பாங்கர்
ஆத்திக அறிவ கம்சேர்
அருஞ்சன சமூக மன்றம்
நேர்த்தியாய் ஆடி தோறும்
நிலவமா வாசை நாளில்
ஏத்திடு விழாவை ஆண்டு
விழாவென நடத்தி வந்தார்.

ஊர்ப்பொதுக் கருமம் யாவும்
ஒன்றிய சிரம தான
மார்க்கத்தைக் கடைப் பிடித்து
வழிவழி செய்த தாலே
ஆர்ப்புறும் அரசாங் கத்தார்
அளித்திடு நிதியும் பெற்றுக்
கீர்த்தியாய் நிலவும் சங்கம்
கிளர்ந்துமேல் மேலும் வாழ்க.

வெள்ளி விழா வெடுக்கும் மேலாம் அறிவகத்து
புள்ளி மயில் முருகன் பொற்பாதம் - தெள்ளுதமிழ்
நற்கலைகள் யாவுமிந்த நல் வாலிபர் நாளும்
பெற்றிடவே செய்யும் பெரிது

இந்த மலரில் இருக்கும் இதழ்க ளெலாம்
சந்தம் மருவும் தனி மணத்தைச் — சிந்திவந்து
சாதித் துர் நாற்றம் தமிழர் சமூகத்தையினிப்
பேதியாதே காக்கும் பெரிது

பொன்விழாவுங் கண்டு பூதலத்தே இந்நிலையம்
நன்முருகன் பேரருளால் நாளுமே — தன்னிகரொன்
றில்லா இயக்கமென எப்போதுமே வாழ்க
நல்லாசி கூறுகிறேன் நான்.

# ஆடி அமாவாசைத் தினத்தில் விழா ஏன்?

(க. இராசலிங்கம்)

தமிழர்கள் திருநாட்களில் ஆடி அமாவாசையும் ஒன்றாகும். இது எங்கள் ஊரான தென்புலோலி சனசமூக நிலைய உறுப்பினர்களைச் சேர்ந்தோருக்கு ஒரு பெரு விழாவாகத் தோன்றி வருகிறது. இவ்விடத்தில் உள்ளவர்கள் கமக்காரர்கள் இவர்களுக்கு சித்திரை, தை போன்ற மாதங்களில் தோட்ட வேலை அதிகம். ஆகவே அவ்வேளைகளில் வரும் கொண்டாட்டங்களை பெரிதாகக் கொண்டாடுவதில்லை

புகையிலை அறுவடை முடிந்த பிறகு ஓய்வாக இருப்பார்கள். அவ்வேளைகளில் இங்குள்ள இளைஞர்களுக்கும் விளையாடப் போதிய நேரங்கிடைக்கும். அப்படியே ஆடி மாதத்தில் ஆடிப்பிறப்பு, ஆடி அமாவாசை போன்றவற்றை கொண்டாடி வருவது வழக்கம். ஆடி அமாவாசையிலிருந்து கிட்டிப்புல் அடிக்கத் தொடங்குவார்கள். களித்தட்டல் போன்ற ஆட்டங்களையும் ஆடுவார்கள்.

இது பிற்காலத்தில் வேறு விதமாக மாறியது. கைப்பந்தாட்டப் போட்டி நடத்தி முடிவில் அங்குள்ள அனைவருக்கும் சக்கரைத் தண்ணீர் கொடுப்பது வழக்கமாகியது 1947-ம் ஆண்டு இவ்விடத்தைச் சேர்ந்த மாணவர் சிலர் ஹாட்லிக் கல்லூரிக்குப் படிக்கச் சென்றனர். அவர்கள் பாடசாலை விளையாட்டுப் போட்டிகளை கண்ணுற்றும், தாங்களும் அவற்றில் பங்கு கொண்டும், பின் அவ் விளையாட்டுக்களை தங்கள் ஊரிலும் ஆரம்பித்தார்கள் கைப்பந்தாட்ட விளையாட்டு, ஓட்டப் போட்டி ஆகியன இங்கு புகுத்தப்பட்டன இத்தனையும் ஆடி அமாவாசைத் தினத்தில் தான் நடைபெற்று வரலாயிற்று இந்த விளையாட்டே ஈற்றில் எமது சனசமூக நிலையத்தின் விளையாட்டுப் போட்டியாகவும் உருவெடுத்தது இன்றும் எமது நிலைய ஆண்டு விழாவும், விளையாட்டுக்களும் இப்புனித தினத்தில் தான் நடைபெறுகின்றன வெள்ளி விழாவும், இப்புனித தினத்திலேயே நடைபெறுகிறது எனவே ஆடி அமாவாசைத்தினம் எங்களுக்கு மறக்க முடியாத தினமாக இருப்பதில் வியப்பில்லை

நியாய விலையில் சிறந்த பொருட்களுக்கு

விஜயம் செய்யுங்கள்

↓

# செந்தூர் ஏஜென்சி

மொத்த சில்லறை விற்பனையாளர்.

கீழ்க்காணும் கொம்பனிகளின் அங்கீகரிக்கப்பட்ட
விற்பனையாளர்:-

❋ லீவர் பிறதர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்

❋ சிலோன் நியூறிஷனல் பூட்ஸ்

❋ றெகிற் அன்ட் கொல்மன்

❋ எஸ். பி எஸ். ஜெயம் அன்ட் கொம்பனி

நெல்லியடி, — கரவெட்டி.

★

அன்றாட தேவைப் பொருட்களுக்கு

# "டெயிலி நீட்ஸ்"

பலசரக்குப் பொருட்கள்

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

நெல்லியடி, ★ கரவெட்டி.

# சுசீலா ஆபரண மாளிகை

உரிமை: K V. தெய்வேந்திரம்

பிரதான வீதி, - பருத்தித்துறை.

★



அழகிற் சிறந்த

தங்க நகைகளுக்குத்

தகுந்த இடம்

★

ஓடர் நகைகள்



குறித்த காலத்தில்

செய்து கொடுக்கப்படும்.

## SUSILA JEWEL HOUSE

**MAIN STREET, -- POINT PEDRO.**

**பாவனையாளர்களே!**

உ

சகல விதமான

மருந்துச் சாமான்களையும்,

மலிவான விலையில்

பெற்றுக் கொள்ளச் சிறந்த இடம்

★

# அன்னை

# மெடிக்கல் ஸ்ரோர்ஸ்

**30, மக்கள் சந்தை, -- பருத்தித்துறை.**

*With Best Compliments from*

# VADANITHY LTD

**Main Street,**

**(ADJOINING C. T. B. DEPOT)**

**POINT PEDRO.**

சகல விதமான

**ஜவுளி**

வகைகளுக்கும்

சிறந்த இடம்

**புஹாரி**

ஒரு தடவை

விஜயஞ் செய்யுங்கள்

**புஹாரி ரெக்ஸ்ரைல்ஸ்**

161, பிரதான வீதி,

பருத்தித்துறை.

**பாதணிகளா?**

பல ரகங்களில்

பார்வையிட்டு

வாங்குவதற்கு

ஏற்ற இடம்

**★ ஜெய பிரகாஸ் ★**

12, மக்கள் சந்தை,

பருத்தித்துறை.

# அறிவகம் கண்ட பெரியார்கள்.

1968 — திரு சி. செல்லையா
(வடமராட்சி ச. ச. சமாஜ செயலாளர்)
கவிஞர் செ. சுந்தரம்பிள்ளை
திரு தி. முருகேசம்பிள்ளை
(உதவி அரசாங்க அதிபர்)

1969 — திரு மு. சிவசிதம்பரம் (பா. உ.)

1970 — திரு எம். சி. சுப்பிரமணியம் (பா. உ.)
திரு என். செல்லையா
(பதில் சுகாதார பரிசோதகர்)
திரு அல்பேட் காரியவாசம் (பா. உ.)
(தோட்டத் தொழில் உப மந்திரி)

1971 — திரு வி. சிவசுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் – தலைவர், பனம் பொருள் அபிவிருத்திக்குழு)
Dr. M. P. பெரேரா

1972 — திரு பே. பொன்னுச்சாமி
(உடற்பயிற்சிப் போதனாசிரியர்)
திரு க. ஜெயக்கொடி (பா. உ.)

1973 — திரு த. இராசலிங்கம்
(கல்வி அதிகாரி)

1974 — திரு K. மாணிக்கவாசகர்
(வடமராட்சி [தெ / மே] காரியாதிகாரி)

1975 — Dr. S. கதிர்காமத்தம்பி M. B. B. S (D. M. O.)

1976 — Dr மு. வேலும்மயிலும் (M. O. H)
திரு வ. வேலும்மயிலும்
(உதவி அரசாங்க அதிபர், கரவெட்டி)

1977 — திரு க. துரைரத்தினம் (பா. உ.)
திரு வ. க. ஈசுரபாதம்
(வட்டாரக் கல்வி அதிகாரி)

1978 — திரு சி. பற்குணம்
(உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி, வவுனியா)
Dr. அ. நவரத்தினராசா
(மிருக வைத்தியர்)

1979 — திரு க. கார்த்திகேசு
(தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

# நினைவில் நிறைந்தவை

— பொன். கனகசபை (ஆசிரியர்)
மெ. மி. பாடசாலை, புலோலி.

அறிவகத்தின் வெள்ளி விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாட வேண்டும், அத்தோடு வெள்ளி விழா மலர் ஒன்றும் வெளியிட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. அப்போது மலருக்கு விடயதானம் செய்வதற்கு எண்ணினேன். எதைப்பற்றி எழுதலாம் எனச் சிந்தித்தேன். கடந்த காலங்களில் நாம் செய்ய எண்ணியவை, செய்தவை, கைகூடியவை, கைகூடாதவை எல்லாம் என் மனத்திரையில் ஓடின. கடந்த கால் நூற்றாண்டு காலமாக ஒற்றுமையாகவும், உற்சாகத்துடனும் செயலாற்றிய பெருமை மிக்க நாட்களை மனத்திரையில் பார்த்தேன். அவற்றின் விளக்கமே இச்சிறு குறிப்புக்களாகும்.

**1954** — எனது நினைவைவிட்டு நீங்காத ஆண்டு. எமது சமுதாயத்தில் எங்கு பார்த்தாலும் ஒரே பரபரப்பு. இளைஞர்கள் கூடிக் கூடிப் பேசுகிறார்கள். என்ன பேசுகிறார்கள்? அறிவொளி பரப்புவதற்கு இன்றியமையாத வாசிகசாலை ஒன்று வேண்டும் எனப் பேசிக் கொள்ளுகிறார்கள். பேச்சின் அடிப்படையில் திட்டம் ஒன்று உருவாகிறது. கோவிலுக்கு வடக்குப் புறத்தில் ஒரு சிறு கொட்டில் அமைப்பது அவர்களது செயற்திட்டமாக இருந்தது. இதை நிறைவேற்றுவதற்காக பலரது உதவியை நாடுகிறார்கள். கப்புகள், மரங்கள் வேண்டும். சிந்திக்கிறார்கள். காலஞ்சென்ற பெரியார் சாத்திரியார் கணபதிப்பிள்ளையை அணுகி தாங்கள் செய்யப் போகும் காரியத்தைக் கூறி உதவுமாறு கேட்கிறார்கள். அவரும் உதவுவதாக ஒப்புக் கொள்ளுகிறார். பனைகள் தறிக்கப்படுகின்றன. மரங்களும், வளைகளும் குவிகின்றன.

இரண்டு பூவரசு மரங்கள் கிடைத்தன. எனது வீட்டிலிருந்தும் சில மரந்தடிகள் தகப்பனாருக்குத் தெரியாமல் வந்து சேர்ந்தன. ஆனால் கப்புக்கள் மூன்று மட்டுமே இருந்தன. ஒரு கப்புக்கு என்ன செய்யலாம் என அங்கலாய்க்கின்றனர். தோட்டத்தின் மத்தியிலிருக்கும் குளத்தில் விளாமரம் ஒன்று தேடுவாரற்று நின்றது. அதை நாடி இளைஞர் கூட்டமொன்று இளைஞன் சி. குணரத்தினத்தின் தலைமையில் கோடரியுடன் செல்கின்றது. விளாமரம் தறிக்கப்பட்டுக் கொண்டுவரப் பெறுகிறது. நாலு கப்புக்களும் நாட்டப்படுகின்றன. காலஞ்சென்ற மு. கிட்டினபிள்ளை அவர்களும், பெரியார் மு. வயிரமுத்து அவர்களும் இலவசமாகப் பனை மரங்களைச் செப்பனிட்டுக் கோப்பிசமாக்குகின்றனர். சிறு தொகைப் பணம் சேகரிக்கப் பெற்று, கிடுகு வாங்கி வேயப்படுகிறது. இளைஞர்கள் வாடகைச் சைக்கிள்களில் குடத்தனைக்குப் போய் வெண்களி கொண்டு வருகிறார்கள். மண்ணால் சுவர் எழுப்பி வெள்ளைக்களி பூசி வெள்ளை அடிக்கப்படுகிறது. பசுமரத்தாணிபோல் என் மனதில் நிற்கும் இந்தக் காட்சியை மீட்கும்போது இந்த வேளையில் முக்கிய பங்கு கொண்ட திருவாளர்கள்: ஆ. சண்முகம், சி. சுப்பையா, ச. தம்பிமுத்து ஆகியவர்களையும் நினைத்துப் பார்க்கிறேன்.

**1955** — இந்த ஆண்டு ஆவணித் திங்களில் ஒரு சுபதினத்தில் காலம் சென்ற பெரியார் வ. ஆறுமுகம் அவர்கள் வாசிக

சாலையைத் திறந்து வைக்கிறார். திரு ச. மாணிக்கம் அவர்கள் மனமுவந்து பத்திரிகை ஒன்று தினமும் வாசிகசாலைக்கு வருவதற்கான ஒழுங்கைச் செய்கிறார். எனது சிந்தனை முன்னோக்கிப் போகிறது. இந்த வளர்ச்சிப் போக்குக்குக் காரணமாயிருந்தவர்களை நினைவு கூருகிறேன். திண்ணையில் சிறு சிறு புத்தகங்களைக் கொண்ட நூல் நிலையத்தை நிறுவிப் படித்து வந்த விளையாட்டுச் சிறுவர்களான பொ. அப்பையா, மா செல்லத்துரை, சி துரைசிங்கம் ஆகியோரை நினைத்துக் கொள்ளுகிறேன். அந்தச் சிறுவர்கள் செய்ததைக் கண்ட இளைஞர்கள், அவர்களைப் பின்பற்றி பொதுவான வாசிகசாலை ஒன்றை நிறுவ வேண்டும் என எண்ணியதில் வியப்பில்லை.

**1957** — வாசிகசாலையைப் பதிவு செய்து அரச நன்கொடை பெறுவதற்காக மேற்கொள்ளப்பட் முயற்சிகளை எண்ணிப் பார்க்கிறேன். இது சம்பந்தமாக கிராமாட்சிமன்றத்துக்கு திரு. க. இராசலிங்கமும், திரு மா. செல்லத்துரையும், நானும் அலைந்துதிரிந்த நாட்களை விரல்விட்டு எண்ணமுடியாது. பலவிதமான தொல்லைகளுக்கிடையிலேயே நிலையத்தை 2—10—57-இல் பதிவு செய்தோம்.

நிலையான கட்டிடம் — நிலையான கட்டடமொன்றை நிறுவவேண்டும் என விரும்பிய போது அதற்குரிய இடத்தைத் தெரிவு செய்வது பெரும் பிரச்சனையாக இருந்தது. காலஞ்சென்ற பெரியார் மு. ச மாணிக்கம் அவர்கள் மனம் உவந்து தற்போது நிலையம் இருக்கும் இடத்தைத் தந்தார்கள் திருவாளர்கள் ஆ கணபதிப்பிள்ளை, க. இராசலிங்கம் ஆகியோர் காட்டிய தாராள மனப்பான்மை ஏனையோரையும் பண்டமாகவும், பணமாகவும் தந்துதவத் தூண்டிற்று எனலாம். குறிப்பாக திரு. த ச. மாணிக்கம் அவர்கள் கட்டடத்துக்கு வேண்டிய கற்களைத் தாம் தருவதாக முன் வந்தார்கள். இதனால் வெகு விரைவாகக் கட்டடம் கட்டி முடிக்கப் பட்டது.

**1964** — இவ்வாண்டு கார்த்திகைத் திங்களில் இயற்கை அன்னை புயலாகச் சீறினாள். அறிவகம் தரை மட்டமாக்கப் பட்டது இதனால் கட்டடத்தைத் திருப்பிக் கட்டவேண்டிய நிலை ஏற்பட்டது. நிலைமையை உணர்ந்து சகலரும் தாராளமாக உதவினார்கள். இவ்விடத்தில் குறிப்பாக இளைஞர்கள் செய்ததை நினைத்துப் பார்க்கிறேன் அவர்களின் தியாகத்தின் சின்னமே இன்றைய கட்டடம் என்பதில் ஐயமில்லை.

"அறிவகம்" — எமது சமுதாய வளர்ச்சி அறிவை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும் என்பதே எமது குறிக்கோள். எனவே எமது நிலையத்திற்கு "அறிவகம்" எனப் பெயர் சூட்டினோம் அந்தப் பெயரைத் தெரிவு செய்த திரு சி. இரத்தினம் அவர்களை நினைவு கூருகிறேன். அவர்கள் ஆரம்ப காலம் தொடக்கம் அறிவகத்துக்குச் செய்து வரும் பணியை மறக்கமுடியாது.

நன்கொடைகள் — அறிவகத்துக்கு பல வழிகளிலும் நன்கொடை அளித்தவர்களை எண்ணிப் பார்க்கும் போது முன்பு குறிப்பிட்டவர்களை விட வேறு சிலரும் என் கண்முன் தோன்றுகிறார்கள். திரு சி. இரத்தினம் அவர்கள் நீண்டகாலமாகத் தினப்பத்திரிகை ஒன்றை அறிவகம் பெற வசதி செய்து தந்தார் அவரைப் பின்பற்றி பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் தந்துதவியவர்களில் திருவாளர்கள் ஆ. கணபதிப்பிள்ளை, மா. சதாசிவம், த கமலநாதன், த. பேரானந்தம் ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்களாகும். நிலையத்துக்கு வேண்டிய மேசையை திரு சி இரத்தினமும், புத்தக ருக்கையை திரு சி சிவஞானமும், வெற்றிமேடையை திரு கா. செல்வராசாவும். நிலையத்தின் கதவை நானும் கொடுத்துள்ளோம். நிலையத்துக்கு வேண்டிய புத்தகங்களை அன்பளிப்புச் செய்தவர்களில் எனது நினைவைவிட்டு நீங்காதவர் முன்னாள் உதவி அரசாங்க அதிபர் திரு K.

மாணிக்கவாசகர் அவர்களாகும் இவற்றை யெல்லாம் நான் அசைபோடுவதற்கு காரணம் ஒன்றுண்டு. அறிவகத்துக்கு உதவ எவரும் பின்வாங்க மாட்டார்கள் என்பதே அக்காரணமாகும்

சிரமதானம் — கட்டடம், தளபாடம், பத்திரிகைகள், சஞ்சிகைகள், விளையாட்டுப் போட்டிகள், ஆண்டு விழாக்கள் ஆகியன மட்டும் அறிவகத்தைச் சிறப்படையச் செய்யவில்லை என்பதையும் நான் உணர்கிறேன். எமது நிலையத்தின் உறுப்பினர்களின் சேவை மனப்பாங்கும் என் நினைவில் நிறைந்ததாகவே உள்ளது. அறிவக உறுப்பினர்களின் தொண்டு செய்யும் உள்ளத்தை நான் நன்கு அறிவேன். அவர்களின் சேவை மனப்பாங்கு அவர்கள் ஈடுபட்ட பல சிரமதானப் பணிகளில் வெளிப்படக் கூடியதாகவிருந்தது. வதிரி பரமானந்த ஆச்சிரமத்திலும், கருகம்பன் சுடலை வீதியிலும், புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலும் இவர்களால் மேற்கொள்ளப்பட்ட பணிகளை மறக்கவே முடியாது.

கலை — எமது நிலையத்தை ஆரம்பித்த போது எமது சமூகத்தின் கலை உணர்ச்சியை வளர்க்க வேண்டும் என்பதும் எமது உட்கிடையான நோக்கமாக இருந்தது. இசைக் கலை, நாடகக் கலை ஆகியன வளர்ந்து வருவதற்கு அறிவகம் ஆண்டுதோறும் எடுக்கும் விழா பெரும் உதவியாகவிருந்தது. இத்துறைகளில் முன்னோடிகளாகத் திகழ்ந்த திருவாளர்கள் ஆ அரியகுட்டி, க. இராசரத்தினம், ஆ. தம்பையா, ஆ சின்னத்துரை ஆகியோரை நினைவு கூருகிறேன். இன்று எமது இளைஞர்கள் பலர் இசைத்துறை, நாடகத்துறை ஆகியவற்றில் பாண்டித்துவம் பெற்றிருப்பது மனத்திற்கு நிறைவைத் தருகிறது எனினும் இன்னும் கல்வியில் நாம் முன்னேற்றம் அடையாதது விசனத்துக்குரியதே. இந்தத்துறையில் முன்னேற அறிவகம் ஆவனசெய்யும் என எதிர்பார்க்கிறேன்.

கொள்கைப் போராட்டம் — அறிவகம் மேற்கொண்ட வேலைத்திட்டங்கள், நிருவாகத்தின் திறமை, அதன் அமைப்பு விதிகள் ஆகியவற்றைக் கண்டு பொறுமையுற்றவர்கள் எமக்குக் காலத்துக்குக் காலம் தொல்லைகள் தந்ததையும் என்னால் மறக்க முடியவில்லை, தொல்லை என்பதிலும் பார்க்க சவால் விட்டனர் என்றே கூறுவேன். அம்மன் ஆலயத்திற்கு முன்னால் செல்லும் வீதி, அம்மன் வீதி, வைரவர் ஆலயத்திற்கு முன் இருப்பது வைரவர் வீதி, அண்ணமார் கோவிலுக்கு முன் இருப்பது அண்ணமார் வீதி. ஆனால் முருகன் ஆலயத்தின் முன் இருப்பது முருகன் கோவில் வீதி என இருக்கக் கூடாது எனப்பட்டது. இந்த முரண்பாட்டை சுட்டிக் காட்டிய போது எழுந்த எதிர்ப்பை மறக்க முடியாது ஈற்றில் எமது கோரிக்கையே வென்றது. நீதி நியாயத்தின் வெற்றி எனது மனதில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளது

தற்பொழுதும் ஒரு பிரச்சனையைத் தீர்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். எமது நிலையத்துக்கு முன்னால் இருக்கும் வீதி 1963-ம் ஆண்டின் பின் கவனிப்பாரற்றுக் கிடந்தது. எனவே அவ்வீதியைத் திருத்தித் தருவதற்கு, பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் திரு க துரைரத்தினம் அவர்களை அணுகினோம். பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து அவரும் பணம் ஒதுக்கினார். ஆனால் ஒதுக்கப்பட்ட பணமோ, இவ்வீதியிலிருந்து செல்லும் குறுக்கு ஒழுங்கைக்குப் பயன் படுத்தப்பட இருந்தது. இதனைச் சுட்டிக்காட்டி எமது எதிர்ப்பை வலுவாக்கிப் போராடினோம். இதை எழுதும் தருணத்தில் அறிவகத்தின் எதிர்ப்பு நியாயமானது என ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஆவன செய்யப்படும் எனத் தகவல் கிடைத்துள்ளது. மின்விநியோகத்திலும் எம்மைச் சிலர் திட்டமிட்டு வஞ்சித்தார்கள். இதனைப் பகிரங்கமாக பருத்தித்துறைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் அவர்

களை ஒப்புக்கொண்டுள்ளார்கள் அறிவகத்தின் எதிர்ப்பு எப்போதும் நீதியான, நியாயமான போராட்டமாகவே இருக்கும். அநீதியை எதிர்ப்பதும், நீதியை நிலை நிறுத்த முயலுவதுமே எமது நிலையத்தின் குறிக்கோள்களாகும். இக் குறிக்கோள்களின் அடிப்படையில் இயங்கி நாம் ஈற்றில் வெற்றி அடைவதை எண்ணும் போது சத்தியத்துக்கு அழிவில்லை என்பதை அனுபவரீதியாக உணர்கிறேன். இந்த அனுபவங்களே என் மனதில் நீங்காதவையாக இடம் பெறுகின்றன.

**ஆடி அமாவாசைத் தினம்** — ஆடி அமாவாசைத் தினத்தை எமது நிலையத்தின் ஆண்டு விழாத் தினமாக தேர்ந்தெடுத்தோம். இத்தேர்வு பொருத்தமான தேர்வாகும் ஆண்டுதோறும் அத்தினத்தில் விழா எடுத்து வளர்ந்துள்ளோம். எம்மைப் பொறுத்த வரையில் இத்தினம் இரண்டு வகைகளில் புனிதமானதாகும். முதலில் இந்துக்களாகிய எமக்கு சமய ரீதியில் இத்தினம் புனிதமானதாகும். அடுத்து அறிவகத்தின் ஆண்டு விழா கால் நூற்றாண்டு காலமாக அத்தினத்தில் நடைபெற்று வருவதால் புனித நாளாகிறது இத்தினம் எமது சமூகத்தின் வாழ்க்கையில் மறக்கமுடியாத நாளாக இருப்பதால் அச்சமூக அங்கத்தவனாகிய எனது நினைவிலும் அந்த நாள் ஒரு மறக்கமுடியாத மனதில் நிறைந்த நாளாகவே இருக்கிறது.

**1978** — எமது நிலையக் கட்டடத்தைப் புதுப்பிக்க பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கித் தந்த பருத்தித்துறைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. க துரைரத்தினத்தையும், அது சம்பந்தமாக நான் அலைந்த அலைச்சலையும் மறக்கவே முடியாது. பாராளுமன்ற உறுப்பினரின் ஒதுக்கீடு போதாததினால் கட்டட வேலையை முடிக்கமுடியாதிருந்தும் அது சம்பந்தமாக அதிகாரிகள் காட்டிய அசிரத்தையும், அதனால் ஏற்பட்ட சிரமமும் பயங்கரமானதாகவே இருந்தது. ஆனால் இன்று அதைப்பற்றிச் சிந்திக்கும் போது மனதில் மகிழ்ச்சியே ஏற்படுகிறது. அறிவகத்திற்காக அலைஞ்ச அலைச்சல் வீண்போகவில்லை ஈற்றில் அதிகாரிகள் எமது நிலையை உணர்ந்து வேண்டிய நிதி அளித்து உதவினார்கள். இந்த அனுபவம் நினைவில் நிறைந்ததொன்றாகவே உள்ளது.

**பணிகள்** — இறுதியாக எனது சிந்தனையை அறிவகத்தின் பணிகள் மீது ஓடவிடுகிறேன் நாம் நடாத்திய விழாக்கள், படக்காட்சிகள், பட்டி மன்றங்கள், நூலாய்வுகள், கூட்டங்கள், தேநீர் விருந்துக்கள் எல்லாம் எனது நினைவில் நிறைந்துள்ளன. இவற்றால் ஏதாகுதல் பயன் ஏற்பட்டதா என எண்ணிப்பார்க்கிறேன். நாம் எம் பணிகள் மூலம் பெற்ற நன்மைகளை எழுத்தில் வடிக்க இயலாது இதனை நினைக்கும்போது மனதில் மட்டற்ற மகிழ்ச்சியே ஏற்படுகிறது. இந்த மகிழ்ச்சி நிலையிலிருந்து எமது வெற்றிக்கான காரணங்களை அசைபோடுகிறேன் எமது வெற்றிக்கு முக்கிய காரணம் வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே என்று தோன்றுகிறது இந்தப் பாடத்தையே அறிவகம் எமக்கு வருடா வருடம் தனது விழா மூலம் கற்பித்துள்ளது அறிவகத்தைப் பொறுத்தளவில் சுயநலம் என்ற பேச்சுக்கே இடமில்லை அறிவகத்தின் வளர்ச்சியே எமது மூச்சாகும். இக் குறிக்கோளுடன் செயற்படும் எந்த நிலையமும் சோடை போனது கிடையாது. சென்ற கால் நூற்றாண்டுகளாக நான் பெற்ற அனுபவ ரீதியான உணர்வுகளை எழுத்து வடிவில் தந்துள்ளேன். இவற்றை வருங்காலச் சந்ததியினர் படித்துப் பகுத்துணர்ந்து செயற்பட வேண்டும் என்பதே எனது பேரவாவும், பணிவான வேண்டுகோளுமாகும்

வாழ்க அறிவகம்!
ஓங்குக அதன் புகழ்!!

# சாதியும் சட்டமும்

க. ஜெயக்கொடி, சட்டத்தரணி
(முன்னாள், பாராளுமன்ற உறுப்பினர்)

இலங்கைச் சட்டங்களுள் முக்கியமானதும், முதன்மை பெற்றதும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பேயாகும். அரசியல் அமைப்பில் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் சட்டத்தின் முன் ஆட்கள் எல்லோரும் சமமானவர்கள் என்பதும் "இனம் மதம், மொழி, சாதி, பால், அரசியற் கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக எந்தப் பிரசைக்கும் ஓரம் காட்டுதல் ஆகாது" என்ற உயர் தத்துவம் பொறிக்கப்பட்டிருக்கின்றது. அது மாத்திரமன்றி எந்த ஆளும் இனம் மதம், மொழி, சாதி, பால் காரணமாக கடைகள், பொது உணவுச் சாலைகள், விடுதிகள், வழிபாட்டிடங்கள் என்பனவற்றிற்கு செல்லுதல் தொடர்பில் ஏதும் தகுதியீனத்திற்கு உட்பட்டவராதலாகாது என்பதும் அடிப்படை உரிமைகளில் ஒன்று

ஆனால் நடைமுறையில் இந்த இலட்சியம் சாத்தியப்படுவதில்லை. உரிமைகள் அரசியல் சாசனத்தில் பொறிக்கப்பட்டிருப்பினும் அவற்றை நடைமுறைப்படுத்த இலகுவான வழிவகைகள் வகுக்கப்படவில்லை இவை இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் பொதுவானவை. எனினும் தமிழர்களைப் பொறுத்தளவில் — பண்டு தொட்டு உரிமைகள் மறுக்கப்பட்ட சிறுபான்மைத் தமிழர் நலன் கருதி — உரிமை சம்பந்தமாக ஆக்கப்பட்ட சட்டத்தையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் சற்று ஆராய்தல் பொருத்தமானதாகும்.

சாதியொழிப்பிற்குச் சட்டம் வர வழிவகுத்துக் கொடுத்தவர் முன்னாள் திருமலை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இராசவரோதயம் அவர்களே. 1957-ல் அவரால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தனிநபர் பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டு 1957-ம் ஆண்டின் 21-ம் இலக்கச் சட்டமாக, சமூகக் குறைபாட்டுகள் தடுப்புச் சட்டம் பிறந்தது. இச்சட்டம் சாதாரணமாக ஆலயப் பிரவேசத்துக்காக உண்டாக்கப்பட்டதென ஓர் அபிப்பிராயம் இருப்பதால் இச்சட்டத்தின் சரத்துக்களை குறிப்பது பொருத்தமாகும்.

மூன்றே மூன்று சரத்துக்களைக் கொண்டது இச்சட்டம். எவர் ஒருவர் சாதி காரணமாக இன்னுமொருவரை ஏதும் சமூக குறைபாட்டுக்குட்படுத்துவாராயின், தண்டனைக்குரிய குற்றம் புரிந்தவராக கருதப்பட்டு, குற்றவாளியாகக் காணுமிடத்து ஆறுமாத மறியலுக்கு அல்லது நூறு ரூபா தெண்டத்துக்கு கூடாத தண்டனை வழங்கப்படும் என சரத்து 2 கூறிற்று. என்னென்ன செயல்கள் தண்டிக்கப்படத்தக்க செயலாகும் என்பது மூன்றும் சரத்தில் விபரிக்கப்பட்டிருக்கின்றது. அவையாவன:

1. கல்விக் கூடங்களில் மாணவனாய் சேரவோ ஆசிரியராய் நியமனம் பெறவோ,
2. கடை, சந்தை முதலிய இடங்களில் செல்லவோ கொள்வனவு செய்யவோ,
3. உணவுச் சாலைகளில் உட்செல்லவோ உணவு பரிமாறவோ,
4. விடுதிகளில் தங்க அறைபெறவோ,
5. பொதுக் கிணறு, நீர்ச்சுனை, குளாய் முதலியவற்றில் தண்ணீர் எடுக்கவோ பாவிக்கவோ,

6. சலவை செய்யும் இடத்திலோ, மயிர் கத்தரிக்குமிடத்திலோ. உட்புகவோ சேவை செய்விக்கவோ,

7. பொதுச் சுடலையில் உட்புகுந்து தகனம் செய்யவோ,

8. எவ்வித ஆடை அணியவோ, தலைப்பாகை, கால் அணி அணிவதையோ,

9. பொது போக்குவரத்து சாதனங்களில் பிரயாணம் செய்யவோ,

10. பொதுமக்கள் போகும் இடங்களில் உட்புகவோ, தங்கவோ,

11. சட்டரீதியான தொழில்களைப் பார்க்கவோ

தடைசெய்தல் தண்டனைக்குரிய குற்றமாகும்.

அத்துடன்

1. ஒரு மதத்தினர் வழிபடும் இடங்களில் அம்மதத்தைச் சேர்ந்த ஒருவர் உட்புகவோ, தங்கவோ, வழிபடவோ தடுத்தல் அல்லது இடையூறு செய்தல்,

2 அரசாங்க உத்தியோகத்தர் தன் கடமையை செய்ய மறுத்தல்,

3. பொதுமக்கள் செல்லும் ஸ்தாபனங்களில் அதன் சொந்தங்காரர் அல்லது அங்கு தொழில்புரிபவர் அல்லது பொறுப்பாயிருப்பவர் பாகுபாடு காட்டல்;

முதலியனவும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

இவை ஒவ்வொன்றையும் பற்றி வியாக்கியானம் செய்யவேண்டிய அவசியமில்லை எனினும் இச்சட்டம் ஏற்படுத்திய தாக்கத்தைக் குறிப்பிடுதல் அவசியமாகும். செவ்வந்திநாதன் எதிர் நாகலிங்கம் (69 பு. ச அ 419) என்ற வழக்கில் சமூக குறைபாடுகள் தடுப்புச் சட்டத்திற்கு பிழையான குறுகிய விளக்கம் நீதியரசர் ரி. எஸ். பெர்ணுன்டோ அவர்களால் அளிக்கப்பட்டது. அவர் "மேற்படி சட்டம் புதிய தடைகளைப் புகுத்துவதைத் தடுக்கப் பயன்படுமே அன்றிப் பழைய தடைகளை அகற்றப் பயன்படாது" என்று தீர்ப்பளித்தார். ஆனல் இத்துணிபு பின்னைய சுந்தரலிங்கம் எதிர் ஷேரத் (72, பு ச அ. 54) வழக்கில் நீதியரசர் எச். என். ஜி. பெர்ணுன்டோ அவர்களால் பின்பற்றப்படவில்லை. இவ்வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பை மேன்முறையீட்டில் சுந்தரலிங்கம் எதிர் பொலிசு பரிசோதகர், காங்கேசன்துறை (74, பு ச. அ 457) கோமறைக் கழகமும் அங்கீகரித்தது. 74-ஆம் சட்ட அறிக்கையில் 459-ஆம் பக்கத்தில் காணப்படும் இத்தீர்ப்பின் விபரங்கள் சுவையானவையாகும்.

சுந்தரலிங்கம் என்னும் இந்து மதத்தைச்சேர்ந்த ஒருவர் அதே மதத்தைச் சேர்ந்த M. S. என்னும் ஒருவரை மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் உட்பிரகாரத்துள் செல்லவிடாது தடுத்தார். கோவில் பிரதம குருக்களின் அனுமதியுடனேயே அவ்வாறு தடுத்தார் M S என்பவர் பள்ளர் சாதியைச் சேர்ந்தவர் என்றும், சமய வழமைப்படி உட்புக முடியாதவரென்றும், வெளியில் நின்றுதான் வணங்க வேண்டும் என்றும் காரணம் காட்டப்பட்டது. எனினும் சுந்தரலிங்கம் குற்றவாளியாக மல்லாகம் நீதிமன்றத்தில் காணப்பட்டார்.

சுந்தரலிங்கம் என்னும் குற்றவாளி இத்தீர்ப்பை எதிர்த்து இலங்கையிலுள்ள மேன்முறையீட்டு மன்றத்துக்கு மனுச் செய்தார். அங்கே அவரின் மனு நிராகரிக்கப்பட்டது அதைத் தொடர்ந்து இங்கிலாந்திலுள்ள கோமறைக் கழகத்துக்கு மனுச்செய்து தானே சென்று வாதாடினர். அவரின் வாதம் பின்வரும் அடிப்படையில் அமைந்தது.

1. சோல்பரி அரசியல் சட்டத்தில் சிறுபான்மையினம் மதங்கட்கு நிரந்தரக் காப்பாகக் கருதப்பட்ட

29 (2) சரத்தை தனக்கு கவசமாக்க அவர் முற்பட்டிருந்தார்.

2. வழக்காற்று உரிமைகள் விசேட உரித்துவங்களுக்கு சட்ட அங்கீகாரம் வழங்கும் தேசவழமைப் பிரமாணத்தின்படி தன் நடத்தை சரியானது என நிரூபிக்கமுயன்ருர். எனினும் மனுதாரராகிய சுந்தரலிங்கத்தின் வாதம் முற்ருக நிராகரிக்கப்பட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

1957-ஆம் ஆண்டின் சட்டத்துக்கு 1971-ஆம் ஆண்டில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. 1971-ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க சமூகக் குறைபாடுகள் தடுப்பு (திருத்தச்) சட்டத்தில் ''பொது'' என்ற சொல் புகுத்தப்பட்டது. சிகையலங்கார நிலையம் தொடர்பான வழக்கொன்றில் சிகை அலங்கார நிலையம் என்ருல் பொது சிகை அலங்கார நிலையமாக இருக்க வேண்டியதில்லை என தீர்ப்பளிக்கப்பட்டதனுலேயே இத்திருத்தம் கொண்டுவரப்பட்டது. வேறு திருத்தங்களும் செய்யப்பட்டன. ''எந்த வழிபாட்டு இடங்களும்'' என்பதுடன் ''அவற்றைச் சார்ந்த எந்த இடங்களும்'' என்ற சொற்ருெடர் சேர்க்கப்பட்டது 6 மாதம் 3 வருடம் ஆக்கப்கப்பட்டும். 100 ரூபாய் 3000 ரூபாவாக உயர்த்தப்பட்டும் தண்டனையின் பரப்பும் தண்டத்தின் அளவும் விஸ்தரிக்கப்பட்டது.

சட்டம் இருந்தும் நடைமுறையில் என்ன நிகழ்கின்றது என்பதை நோக்கின் சட்டத்தினுல் மட்டும் சமூகக் குறைபாடுகள் தீரும் என்பதிற்கில்லை என்றே சொல்லத் தோன்றுகிறது. ''இருப்பவை போதா இன்னும் கடுமையான சட்டங்கள் தேவை'' என்றும் கூறப்படுகிறது. சட்டமும் தேவைதான், அதே நேரத்தில் மனமாற்றமும் ஏற்பட வேண்டும். கல்வி, பிரசாரம் ஆகியவற்ருல் மனமாற்றம் ஏற்படும் என எதிர்பார்ப்போமாக.

---

## அமைதி வேண்டுமா?

இதயத்தில் நேர்மை இருந்தால்
குணத்தில் அழகு இருக்கும்;
குணத்தில் அழகு இருக்கும்போது
வீட்டில் இனிமையான ஒற்றுமை
இருக்கும்; வீட்டில் இனிமையான
ஒற்றுமை ஏற்பட்டால், நாட்டில்
ஒழுங்கு இருக்கும்; நாட்டில்
ஒழுங்கு ஏற்படும்போது உலகில்
அமைதி நிலவும்.

-கண்பூசியஸ்

பாவனையாளர்களே!

நோய் பிடித்துவிட்டது என்ற கவலையா? துன்பமா?

தயங்காதீர்கள்! விஜயம் செய்யுங்கள்!!

புலோலி ப. நோ. கூ. ச. மருந்துச்சாலை

ஆஸ்பத்திரி வீதி, — மந்திகை.

உங்கள் மருந்துத் தேவையை
உடன் பூர்த்தி செய்யக் காத்திருக்கின்றது.

சிறு குழந்தைகளுக்கான பால்மா மற்றும் சாய்ப்புச் சாமான்களும்
நியாய விலையில் கிடைக்க

இன்றே விஜயம் செய்யுங்கள்

**புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க**

# மருந்துச்சாலை

ஆஸ்பத்திரி வீதி, மந்திகை, புலோலி.

---

## Rani Stores

வீட்டுப் பாவனைப் பொருட்களா?

உடனே
விஜயம் செய்யுங்கள்

S SIVARAJAH
**RANI STORES**
No. 57, 58, People's Market,
**POINT PEDRO.**

---

- சிறந்த சிற்றுண்டி வகைகளுக்கும்,
- தேன் சிந்தும் ஐஸ்கிறீம் வகைகளுக்கும்,
- சிறந்த குளிர் பானங்களுக்கும்

விஜயம் செய்யுங்கள்

**விநாயகா**
**கோப்பி & கூல்பார்**
மந்திகை.
உரிமையாளர்: கி விஜயரத்தினம்

❁ வெல்டிங் வேலைகள் ❁ கேற்றுகள் ❁ யன்னல் கிறில்கள்

யாவும் திறமை வாய்ந்த நிபுணர்களால், குறித்த நேரத்தில் நிறைந்த உத்தர வாதத்துடன் தயாரித்துக் கொடுக்கின்றோம்.

நீர் இறைக்கும் இயந்திரங்கள், இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள் ஆகியனவும் திருத்திக் கொடுக்கப்படும்.

உடனே தொடர்புகொள்ளுங்கள்

# ரவி என்ஜினியரிங் வேக்ஸ்

சாமியன் அரசடி,

கொடிகாம வீதி,

வதிரி, — கரவெட்டி.

---

அன்பளிப்பு:

**★ டீன் ரெயிலறிங் ★**

பிரதான வீதி,

பஸ் நிலையம்,

பருத்தித்துறை.

---

சகல விதமான

ஜவுளி வகைகளுக்கும்

இன்றே நாடுங்கள்

**SARASWATHY STORES**

**Dealers in Textiles**

55, Grand Bazaar,

**JAFFNA.**

சிறந்த சிற்றுண்டி வகைகட்கு
நெல்லியடியில்
" கிறீன்லன்ஸ் "

இன்றே
விஜயம் செய்யுங்கள்

**கிறீன்லன்ஸ்**

நெல்லியடி, — கரவெட்டி.

*With Best*
*Compliments*
*from*

K. Selvarajah

**RAJA STORES**
NELLIADY,
**KARAVEDDI.**

❋ பாணு?
❋ பணிஸா?
❋ பிஸ்கற்று?

எது வேண்டுமானலும்
இன்றே நாடுங்கள்

**சுபராஸ் பேக்கரி**

நெல்லியடி — கரவெட்டி

மந்திகையில்

தரமான உணவு வகைகளுக்கு

சிறந்த இடம்

கிருஷ்ணு கபே

உரிமையாளர்: கா. சிவபாதம்

**மந்திகை, - புலோலி.**

**பருத்தித்துறை — புலோலி**

## தெங்கு பனம் பொருள்
## உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்.

மேற்படி எமது சங்கத்தின்

**உற்பத்திப் பொருட்களை**

**எமது சங்கத்தின் கீழ் இயங்கிவரும் கிளைகளில்**

அங்கீகரிக்கப்பட்ட நேரங்களில்

பெற்றுக்கொள்ளலாம்

என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றோம்.

---

அதி சிறந்த

**ஐஸ்கிறீம்**

வகைகளுக்கு

**யாழ்ப்பாணத்தில்**

சிறந்த இடம்

**Nectar Cream House**

208, 1st Cross Street,

JAFFNA.

---

*With Best Compliments*

*from:*

**M. P. Veeravagu & Co**

15, Power House Road,

JAFFNA.

# நாடகமும் அறிவகமும்

— சி. சிவபாதம்

நாடகத்துறையைப் பொறுத்தளவில் எமக்குச் சிறந்த பாரம்பரியம் ஒன்றுண்டு. எமது முன்னோர்கள் நாடகத்துறையை வளர்த்து புகழ் பெற்றவர்கள். கப்பல் வல்லி, அருச்சுணன் கந்தர், அசுவம், மாயவர், பாற்காரி பெயர்கள் நாடகத்துறையில் புகழ்பெற்ற நம்மவர்கள் பெற்ற பட்டப் பெயர்களில் சிலவாகும். இத்தகைய சிறந்த மரமொன்றைப் பெற்றிருக்கும் அறிவகம் சென்ற கால் நூற்றுண்டு காலமாக ஈட்டிய சாதனைகளைத் தொட்டுக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஐம்பதுகளில் நாடக வளர்ச்சிக்கு வழி வகுத்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் திருவாளர்கள்: ஆ தம்பையா, ஆ. அரியகுட்டி, க. இராசரத்தினம், ஆ சின்னத்துரை ஆகியோராகும். திரு ஆ தம்பையா அவர்களும், திரு ஆ அரியகுட்டி அவர்களும் ஆரம்ப காலம் தொட்டே முறையே ஹார்மோனியம், மிருதங்கம் ஆகிய வாத்தியங்களை நாடகப் பழக்கத்தின் போதும், அரங்கேற்றத்தின் போதும் வாசித்துதவினுர்கள். திருவாளர்கள்: க. இராசரத்தினமும் ஆ. சின்னத்துரையும் நாடகங்களை நெறிப்படுத்துவதில் பேருதவி புரிந்தார்கள். ஆரம்பத்தில் இந் நால்வரின் உதவிகிடைத்தமை எமது நற்பேறே எனலாம். இப் பெரியார்களை இதயத்தில் வைத்துப் போற்ற அறிவகம் கடமைப்பட்டுள்ளது.

அறிவகம் அரங்கேற்றிய நாடகங்களில் அல்லி அர்ச்சுனு, பவளக்கொடி, ஸ்ரீவள்ளி, சாரங்கதாரா, அம்பிகாபதி, நல்லதங்காள், அரிச்சந்திரா ஆகியன பெரும் புகழ் ஈட்டியவையாகும். நல்ல அறிவுரை, வளமான கருத்து, பக்திச் சுவை ஆகியவற்றைப் புலப்படுத்தும் நாடகங்களே அரங்கேற்றப்பட்டன. அத்துடன் அறிவகம் அரங்கேற்றிய நாடகங்கள் பெரும்பாலும் பாடல்களை முதன்மையாகக் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சென்ற கால் நூற்றுண்டு காலத்தில் அறிவகம் எமது மத்தியில் ஒரு சிறந்த கலைஞர் கூட்டத்தையே உருவாக்கியுள்ளது எனின் அது மிகையாகாது. பழம் பெரும் நடிகர்களான திருவாளர்கள்: ஆ. தம்பையா, ஆ. சின்னத்துரை, க. இராசரத்தினம் ஆகியோர்களின் முயற்சியினுல் உருவாக்கப்பட்ட நடிகர்களில் திருவாளர்கள்: ச தம்பிமுத்து, சி சிவபாதம், கா. திரவியம், சு மாசிலாமணி, சி. உருத்திரம், கா செல்வராசா, சி சிவஞானம், பொ கனகசபை, மா. அருட்செல்வம், த. பேரானந்தம், ஆ செல்வரத்தினம், மா. சதாசிவம், க தவயோகம், செ. கனகரத்தினம், த கமலநாதன், வ. சிவலிங்கம், மு. யோகராசா, பொ. சிவலோகநாதன் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்களாவர் இக்கலைஞர்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த அண்ணுவியார் திரு K V. நற்குணம் அவர்களுக்கும் அறிவகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

அறுபதுகளில் மரபுவழி நாடகத்தைத்தழுவி சிறு நாடகங்களும் அரங்கேற்றப் பட்டுள்ளன. அவற்றை அறிவகத்தைச் சேர்ந்த இளைஞர்களே எழுதி நடித்தார்கள். அவற்றுள் கடோற்கசன் தூது, மார்க்கண்டேயர், பரதன், அமணனும் குமணனும், நக்கீரர், தமயந்தி, ஏகலைவன், வீரத்திலகங்கள், சிலம்புச் செல்வி போன்

றன குறிப்பிடத்தக்கனவாகும். இக் கால கட்டத்திலும் அதற்குப் பின்னரும் சுந்தரமூர்த்தி நாயனார், வாசீகர், நம்பியாண்டார் நம்பி, அப்பூதி அடிகள் போன்ற இசை நாடகங்களும் அரங்கேற் றப்பட்டன.

எழுபதுக்ளில் நாடகத்திற்கு பெரும் தொண்டாற்றியவர் திரு. கா. தங்கராசா அவர்களாகும். அவர்கள் சமூக சரித்திர நாடகங்களை தாமே எழுதி அவற்றை நெறிப்படுத்தியதுடன் பாத்திரமேற்றும் நடித்துள்ளார்கள் அவர் எழுதிய நாடகங் கள் நாடகப் போட்டிகளில் பரிசில் பெற்று அறிவகத்துக்குப் புகழைத் தேடித்தந்துள் ளன இவர் நீதியே நீகேள், மெழுகுவர்த்தி, சாத்திரியார், இன்பநாள், தெய்வத்தின் தீர்ப்பு, அவமானம், அன்று சிந்திய இரத்தம், உத்தமபுத்திரன் ஆகிய நாட கங்களை நெறிப்படுத்தியுள்ளார். திரு. தங்கராசா குழுவைச் சேர்ந்த இளைஞர்கள் பலர் இன்று சிறந்த நடிகர் களாகத் திகழ்கிறார்கள். இவர்களுள் ச. பன்னீர்ச்செல்வம், சி வின்சிலோ, இ. பத்மநாதன், த நித்தியானந்தம், கா. செல்வநாயகம், கா. கந்தசாமி, மா. ஜெயரஞ்சிதம், ச. ஸ்ரீபவான் ஆகி யோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

நாடக மேடையேற்றங்களின்போது ஒப்பனை, மேடைஅமைப்பு, இசையமைப்பு ஆகியவற்றிலும் பலர் எமக்கு உதவி புரிந்துள்ளார்கள். ஒப்பனை செய்துதவிய திரு. க விக்கினேசு, திரு. சி சுப்பையா ஆகியோருக்கும், மேடை அமைப்பைத் திறம்படச் செய்துதவிய திரு மா. செல்லத்துரை. திரு பிலிப்பு ஆகியோருக் கும், மின்வசதியை ஏற்படுத்தித்தந்தவர் களுக்கும், பணவுதவியுடன் தமது உடல் உழைப்பையும் தந்துதவிய அனை வருக்கும் அறிவகம் பெரிதும் கடமைப் பட்டுள்ளது அத்துடன் அண்மை ஆண் டுகளில் ஹார்மோனியம் வாசித்துதவிய திரு. மா. அருட்செல்வம் அவர்களையும், மிருதங்கம் வாசித்துதவிய திரு. அ. செல்வரத்தினம் அவர்களையும் மறப்பதற் கில்லை அறிவகத்தைச் சேர்ந்த இளைஞர் களின் அயரா உழைப்பே எமது நாடகங் கள் வெற்றிபெற உதவின என்பதை நினைந்து நாம் பெருமையடையலாம். அவர்களுக்கு ஆக்க பூர்வமான உதவிகள் புரிந்த பெரியார்களுக்கும் எம் நன்றி உரித்தாகுக.

பழைய நாடகங்களைப் நவீனப் படுத்தி மேடையேற்ற வேண்டும் என்ப தும் அறிவகத்தின் நோக்கமாகும். மகுடசுந்தர விலாசம், கிருஷ்ண விலாசம் போன்ற நாடகங்களை நவீனப்படுத்தவும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன கிருஷ்ண விலாசம் மிகவிரைவில் ''மாமனை வென்ற மருமகன்'' என்ற பெயரில் அரங்கேறவுள் ளது.

இன்று நாம் இசைநாடகம், நடன நாடகம், சமூக சீர்திருத்த நாடகம், ஓரங்க நாடகம், மௌன நாட கம், ரேடியோ நாடகம் என்றெல்லாம் கேள்விப்படுகிறோம் இத்துறைகள் அனைத்திலும் அறிவகம் ஈடுபட்டு புகழு டன் விளங்குவதுடன், நாடகக்கலை வளர்ச் சிக்கும் உதவவேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும். தமிழ் நாடக உலகு பழமை வாய்ந்தது, நல்ல வருங்காலத்தை உடையது. அறிவகம் இதை உணர்ந்து செயற்படுமாக.

# சித்த வைத்தியம்

பொன். அப்பையா
(கச்சேரி, முல்லைத்தீவு.)

சத்திர சிகிச்சை மூலம் மனிதர்களின் அவயங்களை மாற்றவும், கண் குருடானவர்களுக்கு வேறு மனிதர்களின் கண்களை எடுத்துப் பொருத்தி கண்பார்வையைக் கொடுக்கவும், இருதயத்தில் பழுது ஏற்பட்டால் செயற்கை இருதயம் பொருத்தி மனிதனை வாழவைக்கவும் முன்னேறியிருக்கும் மருத்துவத்துறைக்கு வித்திட்ட எமது "சித்த வைத்தியம்" இன்றும் இலைமறை காயாகவே இருந்து வருகிறது. பல்லாயிரம் வருடங்களுக்கு முன் தோன்றிய சித்தர்கள், ரிஷிகள், ஞானிகள், யோகிகளான விஞ்ஞானிகள் போன்றோர் செய்துகண்ட அரும்பெரும் ஆராட்சிகளின் முடிவே சித்தவைத்தியமாகும். ஜீவராசிகளுக்கு ஏற்படக்கூடிய நோய்களையும், அவற்றைக் குணப்படுத்தும் மருந்துகளையும் இவர்கள் ஆராட்சி செய்து கட்டறிந்து கூறியுள்ளார்கள். ஆராட்சிக்கேற்ற கருவிகள் இல்லாத காலத்திலும், ஆராட்சிகளை மேற்கொள்வதற்கேற்ற ஆய்வுகூடங்களும், கல்வி நிறுவனங்களும் இல்லாத காலத்தில், தம் ஆற்றலாலும், சிந்தனையாலும், சித்தர்கள் மூலிகைகளையும், மருந்துச் சரக்குகளையும் ஆராய்ந்து வைத்திய நூல்களைத் தொகுத்துள்ளார்கள். தம் ஆராட்சியின் முடிவுகளை ஏட்டில் பிரதிசெய்து தமது சிஷ்யர்களுக்கு உபதேசித்து வந்துள்ளார்கள். சித்தர்களின் சிஷ்யர்கள் இத்துறையில் தேர்ச்சி பெற்றுத் தம் சந்ததியினர்க்கும், மற்றும் தமக்கு மிகவும் விருப்பத்திற்குரிய சிஷ்யர்களுக்கும் இதனைப் போதித்து வந்தார்கள். ஆகவேதான் இது "பரம்பரை வைத்தியம்" என்றும், "வீட்டு வைத்தியம்" என்றும் கூறப்பட்டு வருகிறது. இதற்கு அனுசரணையாக 18-ம், 19-ம் நூற்றுண்டுகளிலும், 20-ம் நூற்றுண்டு முற்பகுதியிலும் வாழ்ந்த வைத்தியர்கள் அதன் உட்கருத்துக்களை தங்கள் சந்ததியினருக்கன்றி வேறுயாருக்கும் சொல்லிக்கொடுக்காது இரகசியமாக வைத்துக்கொண்டதை நாம் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. ஏட்டுப்பிரதிகளாக இருந்த வைத்திய நூல்கள் பல அழிந்துவிட்டதாக ஆராட்சியாளர்கள் கூறுகின்றனர். எஞ்சியிருக்கும் நூல்களில் கண்டுள்ள அரும்பெரும் மருத்துவ முறைகள், மேல்நாட்டு மருத்துவத் துறையுடன் போட்டியிடக் கூடிய கருத்துக்களை உள்ளடக்கியிருக்கின்றதை அவதானிக்கும் போது, சித்தர்களின் படைப்புகள் யாவும் அழிந்துபோகாது எம் கைக்குக் கிடைத்திருப்பின், மேல்நாட்டு வைத்தியத்துறை சித்த வைத்தியத் துறைக்கு பின்னணியிலேயே நின்றிருக்க வேண்டும்!

மனிதருக்கு ஏற்படும் நோயைக் கையில் உள்ள நரம்பில் பிடித்துப்பார்த்து (கைநாடி பார்த்து) அறிந்து கொள்ளும் முறையை பதினெண் சித்தர்கள் விபரமாக பாடியுள்ளார்கள். மனிதனுக்கு 4448 நோய்கள் உண்டென்பதை கண்டுபிடித்து நோய்களின் பெயர்களையும், அந்நோய்களால் பீடிக்கப்படுபவர்களுக்கு ஏற்படும் குணங்குறிகளையும் மிக விரிவாக விளக்கிக் கூறியுள்ளார்கள். "X-கதிர்" (X-Ray) மூலம் கண்டுகொள்ள வேண்டிய நோயை சித்த வைத்தியர் கையில் நாடியைப்பிடித்துப் பார்த்ததும் கூறிவிடுவார். 4448 நோய்களுக்கும் மருந்துகள் கூறப்பட்டுள்ளது. செந்தூரங்கள், பஸ்பங்கள், கட்டு

வகைகள் போன்றன பல வருடங்கள் அவற்றின் குணம் குன்றுது இருக்கும் மருந்துகளாகும். இவை பல நோய்களைக் குணப்படுத்த வல்லவைகளாகும். மேல் நாட்டு மருத்துவத்துறையில் இவை போன்ற (செந்தூரம் போன்ற) மருந்துகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லையென மேல்நாட்டு அறிஞர்களே ஒப்புக் கொண்டுள்ளதாக ஜனுப். ஹக்கீம் ப. முகமது அப்துல் சாகிபு அவர்களின் "அனுபோக வைத்திய நவநீதம்" என்னும் நூலில் கூறப்பட்டிருக்கின்றது. சில நோய்களுக்கு, உடன் தயாரித்துக் கொடுக்க வேண்டிய மூலிகைக் கசாயங்களும், சியாழங்களும் இருக்கின்றது. தயாரிக்கப்பட்ட நாளிலிருந்து சில மாதங்கள் வரையுமே பிரயோகிக்கக்கூடிய சூரணங்களும், மாத்திரைகளும் அனேகம் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு மருந்தும் தயாரிக்கப்பட்ட நாளிலிருந்து எவ்வளவு காலம்வரை பிரயோகிக்கமுடியும் என்ற காலவரையறைகளை அழுத்தமாகக் கூறியுள்ளார்.

சித்தவைத்திய முறையில் நோய்களை உடன் குணப்படுத்தும் மருந்துகள் இல்லையென ஒரு தப்பான அபிப்பிராயம் நிலவுகின்றது. நோய்களை உடன் குணப்படுத்தும் மருந்துகள் அனேகம் உண்டு. வைத்தியர்கள் அவற்றைப் பிரயோகிக்கும் முறைகளில் தங்கியிருக்கின்றது. நோயின் குணம் அறிந்து, அந்நோய் குணப்படும் போது நோயாளியின் உடலில் ஏற்படும் தாக்கத்தினுல் வேறு நோய் ஏற்படாது இருக்கும் பொருட்டு மனிதரிடமிருக்கும் நோயை வேரோடு களைவதற்கேற்ற மருந்தையே சித்த வைத்தியர் பிரயோகித்து வருவது வழக்கம். இதையே சித்தவைத்திய நூல்களும் அழுத்தமாகக் கூறுகின்றது. ஆகவேதான் நோயைப் படிப்படியாக குணப்படுத்த வேண்டும் என்னும் நியதியை சித்தவைத்தியர்கள் கையாண்டு வருகின்றுர்கள்.

சத்திர சிகிச்சை மூலம் குணப்படுத்த வேண்டிய நோய்களை சித்தமருந்து மூலம் தீர்த்துக்கொள்ள முடியும் என்பதில் சந்தேகமில்லை. செந்தூரம், அகத்தியர் குழம்பு போன்ற மருந்துகள் பல்லாயிரக் கணக்கான நோய்களைக் கண்டிக்கும் ஆற்றல் உடையவை. விசர் நாய் கடிக்கு மேல்நாட்டு வைத்தியர்கள் 40 ஊசிபோட்டுக் குணப்படுத்துகின்றுர்கள். சித்தவைத்திய மருந்தைக் கொண்டு இலகுவாக விசர்நாய் கடிக்கு மருந்து செய்துகொள்ள முடியும் என்பதை ஓய்வு பெற்ற நீதிபதி திரு. வி. பாலராமையர் அவர்கள் "சித்த வைத்திய மருந்து செய்முறை" என்னும் நூலில் நன்கு விளக்கியுள்ளார். இப்பெரியார் நீதிபதயாயிருந்த காலத்தில் இருந்தே சித்தவைத்தியம் பற்றி ஆராட்சிகள் மேற்கொண்டு, சித்தவைத்தியராகவும் பலருக்கு வைத்தியம் செய்து சேவையாற்றியுள்ளார். தனது அனுபவத்தையும் சித்த வைத்தியத்தின் பெருமையும் பற்றி தமிழிலும், ஆங்கிலத்திலும் அனேக புத்தகங்கள் வெளியிட்டுள்ளார்.

இரசாயன மாற்றங்கள் பற்றி சித்த மருத்துவ முறையில் பல உதாரணங்கள் காணக்கூடியதாக இருக்கின்றது. மருந்து சுத்திகளைப்பற்றி விரிவாக விளக்குகின்றுர்கள் மருந்து சுத்தீகரிப்பில் தவறு ஏற்பட்டால், ஆக்கப்படும் மருந்துகள் யாவும் நஞ்சாய்ப் போய்விடும். இதற்கு ஒரு உதாரணத்தைமட்டும் இங்கு எடுத்துக் காட்டலாம். காச்சல், சுரம், முறைக் காச்சல் நோய்களுக்கு "கௌரி மாத்திரை"யை வைத்தியர்கள் பிரயோகிக்கிறுர்கள். நோயாளிகள் பூரண குணமடைந்துவிடுகின்றுர்கள். ஆனுல் இம் மாத்திரை கௌரி பாஷாணத்தில் இருந்து தயாரிக்கப்படுகின்றது. "பாஷணம்" என்ற பெயரே நஞ்சு என்பதைக் குறிக்கிறது. இதை சித்தமுறைப்படி சுத்தீகரித்துவிட்டால், நன்மை பயக்கும் ஓர் அமிர்தமாக மாறிவிடுகின்றது. பாஷாணங்களை இரசாயனத்தாக்கங்கள் மூலம் அமிர்தமான மருந்துகளாக்கும் முறைகள் சித்தவைத்தியத்தில் அனேகம் உண்டு

சித்தவைத்தியம் முன்னேற்றம் அடையாது சித்தர்கள் காலத்தில் இருந்த தரத்திலேயே இன்றும் இருந்துவருவதற்கு அனேக காரணங்கள் உண்டு. சித்தவைத்திய முறைகளை மேலும் ஆராய்ச்சி செய்யும் பொருட்டு நுண்ணறிவாளர்களின் கைக்கும், நிபுணத்துவம் உள்ளவர்களின் கைக்கும் கொடுக்கப்படாது ஒரு சிலரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளமையும், அதனை நவீனமயப்படுத்துவதற்கு அரசினர் நடவடிக்கை எடுக்காது விட்டிருப்பதும், சித்தமருத்துவ மருந்துகள் தயாரிப்பதற்கு வேண்டிய சரக்குகளைப் பெற்றுக் கொள்ளமுடியாது அவை அருகிவருவதும், அவற்றின் விலைகள் கட்டுக்கடங்காது ஏறிக்கொண்டு வருவதும் முக்கியகாரணங்களாகும். சித்தமருந்துகள் தயாரிப்பதற்கு தேவையான முக்கிய சரக்குகளான தாளகம், மனோசிலை, குங்குமப்பூ, கோரோசனை முதலியனவும், நல்லெண்ணெய், ஆமணக்கெண்ணெய், வேப்பெண்ணெய் போன்றவையும் இலகுவாக நியாய விலைக்கு வைத்தியர்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒழுங்குகளை அரசினர் ஏற்படுத்த வேண்டும். சித்த வைத்தியர் சங்கங்களை புனரமைப்புச் செய்து, ஒவ்வொரு வைத்தியர்களின் கீழ் பல தரமான மாணவர்களை (சிஷ்யர்களை) மருத்துவம் கற்றுத் தேர்ச்சிபெற வழியேற்படுத்த வேண்டும். இப்படிக் கற்கும் மாணவர்களை பரீட்சித்து அவர்கள் தனித்தனி வைத்தியம் செய்யும் பொருட்டு அவர்களுக்கு சான்றுப்பத்திரங்கள் வழங்கி, உத்தரவு கொடுத்தல் வேண்டும்.

சித்தமருத்துவத்தை நவீனமயப்படுத்தும் பொருட்டு மருந்துகள் தயாரிக்க வேண்டிய உபகரணங்களை புதுமுறையில் பாவிக்கவும், மருந்துகளின் தன்மைகெட்டுப் போகாது சேமித்து வைத்திருப்பதற்கேற்ற பாத்திரங்களும் வைத்தியர்களுக்கு அரசாங்கத்தினால் கொடுக்கப்படும் அல்லது அவைகளைக் குறைந்த விலையில் வைத்தியர்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதிகளை ஆக்கிக்கொடுத்தல் வேண்டும். "குழித்தைலம்" இறக்குவதற்கு நவீன கருவிகளாக கண்ணாடிக்குளாய்களும், காந்த அடுப்புகளையும் பாவிக்க வழிகளை ஏற்படுத்தல் வேண்டும்.

ஏட்டுப்பிரதிகளாக உள்ள வைத்திய நூல்களை அச்சேற்ற வேண்டும். முன்பு அச்சேறிய வைத்திய நூல்களை மறுபதிப்புச் செய்து மருத்துவம் கற்கும் மாணவர்களுக்கு உதவியளித்தல் வேண்டும். சித்த மருத்துவ முறைகளைப் பற்றி அரிய ஆராட்சிகள் செய்து நூல்வடிவில் வெளியிட்டிருக்கும் வேதகிரி முதலியார் புதல்வர் திரு. கந்தசாமிமுதலியார் அவர்களினதும், வைத்திய பாஸ்கர் திரு கண்ணுசாமி அவர்களினதும் படைப்புக்களிலிருந்தும், ஓய்வு பெற்ற நீதிபதி திரு. வீ பாலராமய்யர் அவர்களின் படைப்புக்களிலிருந்தும், வைத்தியர் ஜனப். ஹக்கீம் ப முகம்மது அப்துல் சாகிபு அவர்களின் படைப்புக்களிலிருந்தும், அகத்தியர், தேரையர், புலிப்பாணி போன்றோரின் காவியங்களையும் உள்ளடக்கி வைத்தியம் கற்கும் மாணக்கர்களுக்கு ஒரு பாடவிதானம் அமைத்து அதன்படி பரீட்சைகளை நடாத்தி சித்தவைத்தியம் மீண்டும் புத்துயிர்பெற வழியேற்படுத்தல் வேண்டும்.

எமது கிராமமாகிய தென் புலோலியில் அரசினர் ஆதார வைத்தியசாலை ஒன்றிருந்த போதிலும், இவ்விருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இக்கிராமத்து மக்கள் அரசினர் வைத்தியசாலைக்குச் சென்று மருந்து பெற்றுக் கொள்வதை ஒரு கீழ்த்தரமான செயலெனக் கருதிவந்ததற்கு காரணம், இங்கு பல சித்தவைத்தியர்கள் வாழ்ந்து வைத்தியத்துறையில் அரும்பெரும் சேவையாற்றி வந்தமையே யாகும். இவர்களில் குறிப்பிடக் கூடியவர்கள் புலோலி தெற்கு, குரும்பகட்டியைச் சேர்ந்த பரம்பரை வைத்திய குடும்பத்தில் தோன்றிய காலஞ் சென்ற வைத்தியரும், ஆசிரியருமான திரு. கிருஸ்ணபிள்ளை பசுபதி அவர்களும், அவரது சகோதரர் இன்றும் சோதிடம், வைத்தியம் ஆகிய துறைகளில் அரும்பெரும் தொண்டாற்றி வருபவருமான திரு. கிருஷ்ணபிள்ளை

சிதம்பரப்பிள்ளை அவர்களும் புலோலி தெற்கு, காந்தியூரில் வாழ்ந்து அடியற்றுக் காலஞ்சென்ற வைத்திய பரம்பரை வைத்தியர்களான திருவாளர்கள் முருகா வேலுப்பிள்ளை அவர்களும் அவரது சகோதரர் முருகா தில்லையம்பலம் அவர்களும், புலோலி, புங்கொடியில் வாழ்ந்து காலஞ்சென்ற வைத்திய பரம்பரை வைத்தியர் திரு. இராமசாமி தம்பிராசா அவர்களும், வைத்திய சேவையாற்றிவரும் அவரது புதல்வர் வைத்தியர் த. ஸ்ரீநந்தகோபால் அவர்களும், புலோலி தெற்கு தவசியூரில் வாழ்ந்த வைத்திய பரம்பரை (கண்) வைத்தியர் திரு. முருகன் வல்லிபுரம் அவர்களும், புலோலி தெற்கு கூவில் ஊரில் வாழ்ந்து காலஞ் சென்ற வைத்தியர் திரு ஆழ்வாப்பிள்ளை கந்தன் அவர்களும், அவரின் புதல்வன் காலஞ் சென்ற வைத்தியர் திரு கந்தன் சரவணை அவர்களும் ஆகும் இவர்களில் குரும்பை கட்டியில் வைத்தியத் தொழில் புரிந்து வரும் வைத்தியரும், ஆசிரியரும், சோதிடருமான திரு. கிருஷ்ணபிள்ளை சிதம்பரப்பிள்ளை அவர்களும், புங்கொடியில் வைத்தியம் செய்திவருபவருமான வைத்தியர் திரு. த. ஸ்ரீநந்தகோபால் அவர்களுமே தற்போது வைத்தியசேவை ஆற்றிவருகின்றுர்கள் எமது கிராமத்தில் சித்தவைத்தியம் அருகிவருவதை நோக்கும் போது சித்தவைத்தியம் என்னும் பாரம்பரிய பொக்கிஷம் அழிந்துவிடுமோ என அஞ்ச வேண்டியுள்ளது. சித்தவைத்தியம் செழிப்புற்று மேல்நாட்டு வைத்தியத்துடன் போட்டியிடும் சந்தர்ப்பத்தை ஆக்குவதற்கு அரசாங்கமும், சித்தவைத்திய பரம்பரைத் தோன்றல்களும், விஞ்ஞான பட்டதாரியளும் முன்வரவேண்டும் இதில் உள்ள பாரம்பரியத்தை மேலும் ஆராட்சிகள் செய்து வளர்ச்சியடைய உதவவேண்டும்

வாழ்க சித்தவைத்தியம் — வளர்க கலை.

# மறப்பது எப்படியோ

காந்தி தவழ் முகமும் காருண்யப்
பார்வையும்
வந்தி நின்ற கணேசா நின்
மறைவால்
நொந்திருக்கும் என் மனதில்
நீங்காத
சாந்தி திகழ்வ தென்னுளோ
இனி
எல்லையற்ற பாடலை எழுச்சியுடன்
பாடி நீ
நல்லதொரு நடிகனுய்த் திகழ்ந்ததை
மறப்பேனே
அல்லும் பகலும் அறிவகத்தின்
புகழ்பாடி
எல்லோரும் ஏற்ற இயங்கியதை
மறப்பேனே
எல்லையற்ற பாடசாலை எழிச்சியுடன்
பாடிநீ
நல்லதொரு நடிகனுய் திகழ்ந்ததை
மறப்பேனே
அல்லும் பகலும் அறிவகத்தின்
புகழ்பாடி
எல்லோரும் ஏற்ற இடைவிடாதுழைத்ததை
மறப்பேனே

— சி. தனபாலசிங்கம்

# இசையின் பெருமை

அண்ணாமலை செல்வரத்தினம்,
*Dip - in - Music (Cey )*

உலகம் ஒளிமயமானது. பஞ்ச பூதங்களான நிலம், நீர், காற்று, அக்கினி, ஆகாயம் என்பவை இயற்கையாகவே ஒலியை எழுப்புகின்றன. இப்படியாக எழும் ஒலிகளின் ஒழுங்கான நாதமே இசை எனப்படும். உலகத்தையெல்லாம் ஆட்டிப்படைக்கும் இறைவனே நாதரூப னுயும், நாட்டியரூபனுயும் உள்ளான் என்பதற்கு அவன் கையிலுள்ள உடுக்கை வாத்தியமும், இடதுபாதம் தூக்கி ஆடும் நிலையும் புலப்படுத்துகின்றது. அதுமட்டு மின்றி காத்தல் கடவுளாகிய கண்ணபிரான் கையில் வேய்ங்குழலும், கல்வித் தெய்வ மாம் கலைமகள் கையில் வீணையும் இருப்பது இசையானது. உலகியலில் மனிதவாழ்க்கை யின் சகல அம்சங்களிலும் கலை, கலாச் சாரம், பண்பாடு, சமயம் போன்ற அனைத்திலும் பின்னிப் பிணைந்திருக்கின் றது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. இத்தகைய சிறப்புள்ள இசையை ஆறறி வுள்ள மனிதன் மட்டுமின்றி எறும்புமுதல் ஆனை ஈருகவுள்ள விலங்குகளும், தாவரங் களும் விரும்பிக்கேட்பதில் வியப்பில்லை.

நம் முன்னேர் தமிழ் மொழியை இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என மூன்ருகவகுத்துள்ளார்கள். இவற்றுள் நடு நாயகமாகத் திகழ்வது இசைத்தமிழ். இயற்றமிழானது இசைத் தமிழின் துணை யுடன் மிளிரும் போது தனித்தன்மையைப் பெறுகின்றது. அதே போன்று நாடகத் தமிழானது இசைத் தமிழுடன் சேர்ந்து இயங்கும் போது புதுமெருகடைகின்றது. இயற்றமிழோ, அன்றி நாடகத் தமிழோ இசையின்றித் தொழிற்படும் போது சோபிப்பதில்லை. ஆனுல் இசைத்தமிழ் ஒன்றே தனிமையாகவும், துணையாகவும் செயல்படவல்லது. இதனுலேதான் இயல், இசை, நாடகம் என வகுத்த போது இசைக்கு நடு இடத்தைக் கொடுத்து அதனைக் கௌரவித்துள்ளார்கள் போலும்.

இசைக்கும், தமிழுக்கும், இந்து சமயத்திற்கும் சங்க காலத்திற்கு முற் பட்ட காலத்திலிருந்தே நெருங்கிய தொடர்பு இருந்துள்ளதை வரலாற்று, இலக்கிய, புராண, இதிகாசங்களிலிருந்து அறியக்கூடியதாயுள்ளது. இந்து சமயத் தில் கூறப்படும் நான்கு பெரும் பிரிவுக ளான இருக்கு, யசுர், சாமம், அதர்வம் ஆகியவற்றுள் இருக்கு வேத நூல்கள் பாடல்களாகவும், சாமவேத நூல்கள் இசை வடிவானதாயும் உள்ளமை குறிப் பிடற்பாலது. முன்னெரு காலத்தில் இலங்கையை ஆண்ட "இராவணன்" என் னும் மன்னன் வீணை வாசிப்பதில் வல்ல வனுய் திகழ்ந்தானென்றும், தனது நாட்டின் கொடியில் வீணையைச் சின்ன மாகப் பொறித்தான் என்றும், இதனுல் அவனை "வீணைக் கொடியோன்" என மக்களும், அறிஞர்களும் போற்றினுர்கள் என்றும் புராண, வரலாற்று நூல்களி லிருந்து அறியக்கிடக்கிறது.

ஒரு நாட்டை அரசாட்சி செய்த மன்னனே இசைவல்லாளனுத் திகழ்ந்தா னென்ருல், அந்தக்காலகட்டத்தில் வாழ்ந்த மக்கள் எந்தளவிற்கு இசைப் பிரியர்களா யும், இசை வல்லாளர்களாயும் இருந்து இசையை எந்தளவிற்குப் போற்றியிருப் பார்கள் என்பதை ஊகித்தறியக்கூடியதா யுள்ளது. வீணைக் கொடியோனுன இராவணன் தன் ஆணவத்தால் சிவபெருமான் உறையும் கயிலையங்கிரியை தகர்த்தான். சினங்கொண்ட இறைவன்

தன் காலால் மலையை அமர்த்திய போது, மலைக்குள் சிக்கி இறக்கும் தறுவாயில் இருந்த இராவணன் தன் பத்துத்தலைகளில் ஒன்றை எடுத்து அதனை வீணைக்கு ஆதார மாக்கி இறைவனும், உமையம்மையும் மெய் மறக்கும் படியாக சாமகீதம் பாடினான். இராவணனின் இசையினால் ஈர்க்கப்பட்ட இறைவன் அவனுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தார் என்றும் அறிகின்றோம் இறைவனே இசையில் மயங்கி தனக்கு துன்பம் செய்ய நினைத்தவனுக்கே இன்ப வாழ்வு கொடுத்தார் என்றால் இசை யின் பெருமையைக் கூறவும் வேண்டுமா?

மனிதன் பிறந்த நாட்தொடக்கம் இறக்கும் நாள்வரை இசையுடன் தொடர்பு கொண்டவனாகவே உள்ளான் ஒரு தாயானவள் தான் பிரசவித்த குழந்தை ஆணோ, பெண்ணோ என்று அறிவதற்கு முன் அக்குழந்தையின் அழுகை ஒலி (இசை) யிலே தன் பிரசவ வேதனைகள் அத்தனையையும் ஒரு நொடிப்பொழுதிலே மறந்து உள்ளம் பூரிப்படைகின்றாள். பின் அந்தக் குழந்தை அழும்போது தாயான வள் தாலாட்டுப் பாடி தூங்கவைக்கிறாள் தாயினுடைய தாலாட்டிசையிலே ஏது மறியா அம் மழலை தூங்குகின்றதெனில் இசை எப்பேற்பட்ட காந்தசக்தி படைத்த தென்பது தெளிவாகும். பிள்ளைப் பருவத் திலே பாப்பாப் பாட்டு, அம்புலிப் பாட்டு, பின் வாலிபப் பருவத்தில் காதற் பாட்டு, இப்படியே வேலைத்தளத்தில் பாட்டு, ஓய்வு நேரத்தில் பாட்டு, முதுமையில் இறைவனை வேண்டி தேவாரம், திருப்பல் லாண்டு, திருவிசைப்பா, இவையெல்லாம் முடிந்து இறப்பதற்கு முன் திருவாசகம், திருப்புகழ், இறந்தபின் ஒப்பாரி இவை யெல்லாம் உலகிலுள்ள மக்களின் மூன்று நிலைகளிலும் - பிள்ளைப்பராயம், வாலிபம், முதுமை - நடைபெறும். ஒரு ராட்டினம் இவை எல்லாவற்றிற்கும் ஆணிவேர் இசையே

இந்து சமயத்தை வளர்த்த நாயன் மார்களும், ஆழ்வார்களும் இசையுட னேயே தேவாரம், திவ்வியபிரபந்தம் என் பவற்றைப்பாடி இறைவனுடன் இரண்டறக் கலந்துள்ளார்கள். திருஞானசம்பந்தர் காலத்தில் யாழ்பாடிகள் அவருடன்கூடவே தல யாத்திரை சென்று அவர்பாடும் தேவாரப் பாடல்களை யாழிலே அமைத்து பண் வழுவாமல் பாடவும், அடியார்களும் பண்ணிசையால்க் கவரப்பட்டு, தாமும் சேர்ந்து பாடினர் எனவும் அறியக்கிடக் கிறது கோவில்களில் இசை வளர்ந்ததற்கு பண்ணோடிசைந்த பாடல்களும் ஒரு காரணமாகும். இறைவனை இசைவடிவிலே காணலாம் என்பதற்காக, அன்று வாழ்ந்த அரசரும், அறிஞர்களும், இசைவல்லாளர் களும் அநேகமான இசைக் கூடங்களை கோவில்களுக்கு அண்மையில் அமைத்து மக்களுக்கு பண்ணிசைப் பயிற்சி அளித்து, இசை வளர்ச்சிக்கு உதவினர். சைவசமய நாயன்மார்கள், ஆள்வார்களது நெறிகளை நோக்கும் போது "இறைவன் ஆடை அணிகலன் ஆடம்பரங்களை விரும்புவ தில்லை என்பதும், மலங்களற்ற நிலையில் குறிப்பாக இசைவடிவாக அவனைத் துதித் தால் நற்பேறு நல்குவான் என்பது தெளிவாகிறது. ஓர் அறிஞர் கூறினார், நாம் ஆண்டவனுக்குச் சாத்தும் பூமாலை மறுகணமே வாடிவிடுகின்றது. ஆனால் பாடும் பாமாலையானது காற்றோடு சேர்ந்து இறைவனின் உள்ளத்தில் மகிழ்ச்சியைக் கொடுத்து, எமக்கு மேலும் பிறவிகள் அநேகம் உண்டாயின் அதைக் குறைத்து பேரின்ப வாழ்வைப் பெற வழி வகுக்கின் றது." என்று இதிலிருந்து இசை எந்தள விற்கு மேம்பாடுடையது என்பதைக் காணலாம்.

மொழி புகாத இடமெல்லாம் இசை புகுந்துள்ளது. இசைக் கலைஞன் இறை வனின் தொண்டன். அவனுக்கு சாதி, சமய, மொழி, நாடு, உயர்ந்தவன், தாழ்ந் தவன் என்ற பேதம் கிடையாது. ஒரு நாட்டுக் கலைஞன் இன்னொரு நாட்டிற்குச் சென்று இசையின் திறமையை வெளிப் படுத்தி இசைக்கும், தனக்கும், தன் தாய் நாட்டிற்கும் புகழைத்தேடித் தருகிறான். இசைக் கலைஞர்களின் சேவையினால் நாடுகளுக்கிடையே கலை, கலாச்சாரப்

பரிவர்த்தனை ஏற்பட ஏதுவாக உள்ளது. இ்று "யாழ்ப்பாணம்" என்று அழைக்கப்படும்பிரதேசம்– அந்தக் இசைக்கலைஞன் ஒருவன் யாழ் வாசித்து தன் திறமையைக் காட்டிப் பெற்ற பரிசு என்று வரலாறு கூறுகின்றது. இங்கு இரண்டு தன்மைகளைக் காணக் கூடியதாயுள்ளது. ஒன்று இசைத் திறமை, இரண்டாவது அந்த இசைக் கலைஞனின் இனம், சாதி, நாடு என்பவற்றைப் பாராது அவனுக்கு நாட்டையே காணிக்கையாகக் கொடுத்தமை. இங்கு நாம் பரிசில் வழங்கிய அரசனின் உயர்ந்த பண்பையும், இசைக் கிருந்த மதிப்பையும் காணக்கூடியதாக வுள்ளது. இசைக்காக நாடு, நகரமென்ன தம் உயிரையே அர்ப்பணித்த உத்தமர்கள் எத்தனை எத்தனைபேர்.

அன்றைய அரச சபையிலே சங்கீதத்தில் தேர்ச்சி பெற்ற இசைக் கலைஞர் ஆஸ்தான வித்துவான்களாக இருந்து இசையை வளர்த்து வந்துள்ளார்கள். அங்கு அவர்களுக்குச் சகல வசதிகளும், ஏன் இராஜமரியாதையே கிடைத்ததென்று அறியக்கிடக்கின்றது. இத்தகை கௌரவத்தை இசைக்குக் கொடுக்கப்பட்ட தனிக் கௌரவமாகக் கொள்ளவேண்டும். இன்றும் இந்தியாவில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் ஆஸ்தான வித்துவான்கள் இருந்து இசையை வளர்த்து வருவது அறியத்தக்க ஒன்றாகும்.

சங்கீத மும் மூர்த்திகளான ஸ்ரீதியாகராஜ சுவாமிகள், முத்துச்சுவாமி தீட்ஸதர், ஸ்ரீசியாமா சாதிரிகள் ஆகியோரும், ஏனைய சங்கீத வித்வான்களும் இசையையே தங்கள் சொத்தாக நினைத்து, இறைவன் புகழ்பாடி நற்பேறு பெற்றது மல்லாமல் "தாம் பெற்ற இன்பத்தை இவ் வையகமும் பெறவேண்டும்" என்ற ஒரே நோக்கில், தாங்கள் இயற்றிய உருப்படிகளை இம் மானிலத்தார்க்கு தந்துள்ளார்கள். இறைவனை வாயார வாழ்த்தி நற்கதி பெறவேண்டும் என்று எண்ணிய ஸ்ரீதியாகராஜ சுவாமிகள் தன் குலதெய்வமான இராமபிரானை நேரே கண்டதாக தனது கிருதியில் காட்டியுள்ளமை, இசை மூலம் இறைவனை அடையலாம் என்பதை வெளிப்படுத்துகின்றது.

இசையானது கீழ்த்தேசத்தில் ஆதிக்கம் பெற்றதாயினும், மேலைத் தேசங்களிலும் அதன் தனித்துவம் நிலைபெற்றுள்ளது. அபிவிருத்தி அடைந்த நாடுகளான பிரான்சு, ஜேர்மனி, இத்தாலி, அமெரிக்கா, இரஷியா போன்ற நாடுகளில் சில நூற்றுண்டுகளுக்கு முன்னிருந்து இசை வளர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. அது மட்டுமன்றி தற்போது ஆபிரிக்காவிலும், மத்திய கிழக்கு நாடுகளிலும், இசையின் செல்வாக்கு அதிகரித்து வருகிறது. மேலும் இலண்டன், கனடா போன்ற நாடுகளில் தமிழிசையை தமிழ் இசைக் கலைஞர்கள் வளர்த்து வருகின்றனர். மேற்கு நாடுகளில் பல்கலைக்கழக மட்டத்தில் இசை ஆராச்சிகள் நடைபெற்று வருவது மேலைத் தேச இசை வளர்ச்சிக்கு உறுதுணையாகும். இந்தியாவில் ஆரம்ப காலத்தைவிட தற்போது கூடியளவு இசை ஆராச்சிகள் நடைபெற்று வருகின்றது. அதேபோன்று இன்று இலங்கையிலும் இசைக் கலையைப் பல்கலைக்கழக மட்டத்தில் போதித்து வருவதும் அதன் வளர்ச்சிக்கு ஏதுவாயுள்ளது.

இசைக் கலையானது ஆரம்பகாலத்திலிருந்து இன்றுவரை உன்னத நிலையில் இருந்து வருகிறது அக்கலை மென்மேலும் வளர்ச்சிபெற இவ் உலகிலுள்ள சகல நாட்டு அரசாங்கங்களும் துணைபுரிய வேண்டும் அரசாங்கம் துணைபுரியும் நேரத்தில் சகல மக்களும் இசையைப் படித்தும், அனுபவித்தும், நற்பேற்றைப் பெறுவது மட்டுமல்லாது, அதன் பெருமையையும் அழியாது பாதுகாத்தால், இன்றைய நிலையை விட வரும் காலத்தில் இசையின் பெருமை மென் மேலும் வளரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

வாழ்க தமிழ்! வளர்க இசை!
பெருகுக இசைக் கலைஞர்!

# கிராமியப் பொருளாதாரமும் யாழ் காந்தி சேவா சங்கமும்

Dr. அ. நவரத்தினராசா,
(செயலாளர். யாழ் காந்தி சேவா சங்கம்.)

கிராமங்களின் பொருளாதார உயர்விலேதான் நாட்டின் வளம் தங்கியுள்ளது. கிராமியப்பொருளாதார உயர்விற்கு பாரிய கைத்தொழில்கள் மட்டுமல்ல, நலிந்து கொண்டுசெல்லும் குடிசைக் கைத்தொழில்களும் ஊக்குவிக்கப்படல் வேண்டும் கிராமத்திலேயே உற்பத்தியாகும் கைத்தொழிற் பொருட்களையும் மக்கள் விரும்பி உபயோகிக்க வேண்டும் என்ற காந்தியடிகளின் கிராமப் பொருளாதார நோக்கினை இலட்சியமாகக் கொண்டு யாழ் காந்தி சேவா சங்கம் தம்மாலான பணிகளை இன, மத, மொழி வேறுபாடுகளின்றிச் செய்து வருகின்றது.

கிராமங்களில் அவ்வப்பகுதி மக்களின் ஆதரவுடன் மாதர் குழுக்களை அமைப்பதும் அதன் மூலம் தமது செயற்திட்டங்களை செயற்படுத்தி வருவதும் காந்திசேவா சங்கத்தின் முதற்பணியாக அமைந்துள்ளது. இவ்வாறு அமைக்கப்பட்ட மாதர் குழுக்கள் தங்கள் கிராமங்களில் பாலர் பாடசாலைகளை நடத்துகிருர்கள் பாலர் பாடசாலைக்கு அக்கிராமத்தைச் சார்ந்த தகுதிவாய்ந்த பெண்களை பாலர் பாடசாலைப் பயிற்சிக்கு அனுப்பி காந்தீய நோக்குள்ள கிராம சேவகிகளாக அக்கிராமத்துக்கே அளித்து வருகிறது. பாலர்களுக்கு இலவசமாகப் பல நிலையங்களில் பால் உணவுகள் வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது சிறுவர் குழு, இளைஞர் குழு என்பனவும் அவ்வக் கிராமப் பகுதிகளிலே நிறுவி சிரமதானப் பணிகளிலே இவர்கள் ஈடுபட்டுச் சேவையாற்ற வழிகோலித் தந்துள்ளது. பல கிராமங்களில் இளைஞர் குழுக்களின் மூலமாகவும், மாதர் குழுக்களின் மூலமாகவும், கூட்டுறவு முறையிலும், தனிப்பட்ட முறையிலும் கோழிப் பண்ணைகளை அமைக்கவும், அதன் மூலம் அவர்களது பொருளாதாரத்தை வளம் படுத்தவும், அத்துடன் வேலைவாய்ப்பளிக்கும் முகமாகவும் சங்கம் பணிபுரிகிறது.

கிராமங்களில் வசிக்கும் மக்கள் கால் நடைகளையும், கோழிகளையும் வருமானத்தைப் பெருக்கும் நோக்கமாக வளர்த்து வருகிருர்கள். இவர்களது கால் நடைகளும், கோழிகளும் தொற்றுநோய்களால் பீடிக்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் அதிக அளவில் இறந்தொழிகின்றன. இதனுல் அவர்களது வருமானம் பெருமளவில் பாதிக்கப்படுகின்றது. இதைத் தடுக்கும் முகமாக சங்கம் ஒவ்வொரு கிராமங்களிலும் கால்நடை வைத்தியரின் உதவி பெற்று கால் நடைகளுக்கும், கோழிகளுக்கும் தடுப்பூசி போடுவதற்கு வசதிசெய்து கொடுக்கிறது. அதுவுமன்றி இக் கிராமங்களில் கால்நடை அபிவிருத்திக்கான திட்டங்களையும் அமுலாக்கி கிராமிய மக்களின் பொருளாதாரத்தை வளம் படுத்த மிகவும் உதவுகிறது.

கெருடாவில், துப்பளை போன்ற கிராமங்களில் சர்வோதய தரிசன ஸ்தாபனத்தின் உதவிபெற்று ஆடுகள், கோழிகள் வளர்க்கும் திட்டங்களை அமுலாக்கியுள்ளது. இதன் மூலமாகச் சங்கம் இக்கிராமங்கள் ஒவ்வொன்றிலும், 50 குடும்பங்களைத் தெரிவு செய்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவசமாக 2 ஆடுகளையும், 25 ஒரு மாதக் கோழிக் குஞ்சுகளையும்

வழங்கியிருக்கிறது. இக் குடும்பங்கள் பெறும் வருமானத்தில் இருந்து ஒரு பகுதியை சிறிது சிறிதாக எடுத்து இதே மாதிரி இன்னும் 50 குடும்பங்களுக்கு, இதே மாதிரி ஆடுகளையும், கோழிக்குஞ்சுகளையும் வழங்க இருக்கிறது. இதே போல தும்பளைக் கிராமத்தில் தையல் பயிற்சி நிலையத்தையும் உருவாக்க சர்வ யோக தரிசன ஸ்தாபனம் உதவியுள்ளது. கால்நடை வளர்ப்புப் பகுதியினர் ஒரு நாள் குஞ்சுகளைத் தான் மக்களுக்குக் கொடுக்கின்றார்கள். ஆனால் யாழ் காந்தி சேவா சங்கம் மக்களின் நன்மைக்காக ஒரு நாள் குஞ்சுகளை எடுத்து வளர்த்து ஒரு மாதக் குஞ்சுகளாக விற்பனை செய்கின்றது. இதைச் செயல் படுத்துவதன் மூலம் வேலையற்றிருக்கும் சிலருக்கு வேலை வாய்ப்புப் பெற்று ஓரளவு வருமானத்தையும் கொடுக்கக் கூடியதாக இச் சங்கம் உதவுகிறது. இது தும்பளைக் கிராமத்தில் நடைபெற்று வருகிறது. இதே போன்ற திட்டங்களை வேறு வேறு கிராமங்களிலும் செயல் படுத்துவதற்கு யா. கா. சே சங்கம் தயாராக இருக்கின்றது. தும்பளையில் நடைபெற்று வரும் பன்னவேலை, தையல் வேலை, பிளாஸ்டிக்வேலை, பிரம்பு, மூங்கில் வேலை போன்ற கைத்தொழில்களில் பயிற்சி பெறுவதற்கு கரவெட்டி மத்தி, கரவெட்டி வடக்கு, கரணவாய் தெற்கு, கரவெட்டி கிழக்கு, வட அல்வை குமுதெணி, தொண்டமனாறு, செட்டியவூர் என்னும் கிராமங்களில் இருந்து அங்கத்தவர்கள் பயிற்சி பெற்று தற்பொழுது தங்களது கிராமத்திலிருந்து இக்கைத்தொழில்களைச் செய்து வருவாயைப் பெறுகிறார்கள். யா. கா. சே சங்கத்தின்கீழ் இயங்கி வரும் பன்னவேலைப் பயிற்சி நிலையத்தில் உள்நாட்டில் விற்பனை செய்யக்கூடிய பொருட்களும், வெளிநாட்டில் விற்பனை செய்யக் கூடிய பொருட்களும் தயாரிக்கப்படுகின்றன உள்நாட்டில் விற்பனை செய்யும் பொருட்களைக் கூடிய விலைக்கு விற்பனை செய்யமுடியாத காரணத்தால் இங்கு வெளிநாட்டிற்கென அறிமுகம் செய்யப்பட்ட கழிவு கடதாசிக் கூடை, தொப்பி, கோப்பைத் தட்டு, மேசைத் தட்டு, சுவர்க் கலண்டர், கைபிடிக் கிலுக்கி, பந்துக் கிலுக்கி, வட்டில், தட்டு (Dray), யானை, கைப்பை போன்ற இன்னும் பல நவீன பொருட்களையும் கூடுதலாக உற்பத்தி செய்து, கூடிய விலைக்கு வெளிநாட்டிற்கு அதாவது நோர்வே, லண்டன் போன்ற பிரதேசங்களுக்கு அனுப்புகின்றோம்.

யாழ் காந்தி சேவா சங்கத்தின் அமைப்புச் செயலாளர் நோர்வே நாட்டிற்குச் சென்று ஓலைப் பொருட்களான வியாபாரக் கட்டளைகளை எடுத்து வந்துள்ளார். அதன் பிரகாரம் மேற்குறிப்பிட்ட பொருட்களை கூடுதலாகச் செய்ய வேண்டியுள்ளது. ஆகவே இப் பொருட்களை மேன் மேலும் கூடுதலாக உற்பத்தி செய்வதற்கு யா கா. சே. ச இன்னும் பல கிராமங்களில் பயிற்சி நிலையங்களை ஆரம்பித்து அங்கத்தவர்களுக்கு பயிற்சி கொடுக்கத் தீர்மானித்திருக்கிறது. சங்கத்தின் கீழ் கடமைபுரியும் பாலர் பாடசாலை ஆசிரியைகள் பாலர் வகுப்பு முடிந்த பின்னர் கைத்தொழிலில் ஈடுபட்டு அதன் மூலமும் தங்களது வருமானத்தை பெருக்குகின்றார்கள். மற்றும் தயாரிக்கப்படும் பொருட்களை, கோயில் தினங்களில் நல்லூர், செல்வச்சந்நிதி போன்ற தலங்களில் கடைபோட்டு சந்தைப் படுத்தியுள்ளது. அநேகமாக மேற்குறிப்பிட்ட கோவில் தலங்களில் பெட்டி, பாய் போன்ற உள்நாட்டுப் பாவனைப் பொருட்களைத்தான் விற்பனை செய்யலாம்

மற்றும் தையல் பயிற்சிநிலையத்தில் பல தரப்பட்ட உடுப்புக்கள் தைத்து, அதாவது சிறுவர் சட்டைகள், பாடசாலைச் சட்டைகள், மற்றும் தலையணி உறை போன்ற பலவிதமான ரகங்களில் தயாரித்து விற்பனை செய்யப்படுகின்றன இதே போல பிளாஸ்டிக் வயறை மூலப்பொருட்களாகக் கொண்டு சந்தைப் பைகள், பாடசாலைப் பைகள், கைப்பைகள், அருச்சனைக் கூடைகள் போன்றவற்றைத் தயாரித்தும் விற்பனை செய்யப்படுகின்றன. இவையாவற்றையும் விட பனையின் மூலப் பொருளைக் கொண்ட பொருட்களில்தான்

அதிகவருவாய் பெறக்கூடியதாக இருக்கின்றது. அதுவுமல்லாமல் இப்பொருட்களுக்கு வெளிநாடுகளில் கூடிய மதிப்புக் கிடைத்துள்ளது. இப்படியாக குறைந்த மூலப்பொருளைக் கொண்டு கூடிய வருவாய்தரக்கூடிய பொருட்களைத் தயாரித்து பல வழிகளில் நன்மையடையச் செய்வதே யா. கா. சே சங்கத்தின் நோக்கமாகும்.

யாழ் காந்தி சேவா சங்கம் தனக்கெனப் பருத்தித்துறையில், அலுவலகம் அமைத்து நிரந்தரமாக ஊழியர்களை அமர்த்தித் தன் சேவைகளைச் செவ்வனே நிறைவேற்றி வருகிறது இச் சங்கத்தின் சேவையினூற் குறுகிய காலத்திலே பல நன்மைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. பலர் கைத்தொழிலிலே ஆர்வத்துடன் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்நியநாட்டுச் செலாவணியைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பும் கிடைத்துள்ளது சுரண்டலற்ற - தன்னுதிக்கமுள்ள கைத்தொழில்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்ற காந்தீய நோக்குடன் செயலாற்றி வரும் யாழ் காந்தீய சேவா சங்கப் பணி பொதுமக்களின் ஒத்துழைப்புடன் மேலும் வளரும். அரசினருடைய உதவி இந்நிறுவனத்திற்குக் கிடைத்தால் மேலும் பல வழிகளிலும் நல்ல சேவையாற்றக் காத்திருக்கின்றது.

★

சகல நாகரிக தையல் வேலைகட்கு

# ரீன் ரெயிலரிங்

கொடிகாமம் றோட் - நெல்லியடி.

---

அறிவுப்பணி, ஆக்கப்பணி, நாட்டின் வளர்ச்சி, இனத்தின் வளர்ச்சி ஆகியவற்றை மனதில் கொண்டு அறிவகத்தின் பணி தொடரட்டும். சமூக, சமுதாய மலர்ச்சிக்கு உதவட்டும்.

8—8—72


- அன்பன் ஒருவர்.

சிறுவர்களிடையே காணப்பட்ட அடக்கம் ஒழுங்கு முறை முதலிய அம்சங்களும் பெரியோர்களிடையே காணப்பட்ட உற்சாகமும் ஒன்று சேர்ந்து மேலும் இச் சன சமூகம் அளப்பரிய தொண்டாற்றி வரும் என்பது எனது மனப்பூர்வமான நம்பிக்கை.


29—7—73

த. இராசலிங்கம்,
வ. கல்வி அதிகாரி.

# அஞ்சலி



வயிரமுத்து
**நவரத்தினம்**



வேலுப்பிள்ளை
**கணேசமூர்த்தி**

அறிவகத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டவர்களான செல்வன் வயிரமுத்து நவரத்தினம், செல்வன் வேலுப்பிள்ளை கணேசமூர்த்தி ஆகியோரின் மறைவு அவர்களின் குடும்பங்களுக்கு மட்டும் ஏற்பட்ட இழப்பு என்பதற்கில்லை அவர்களின் மறைவு அறிவகம் என்னும் பெரிய குடும்பத்துக்கே பேரிழப்பாகும் அறிவகம் வெள்ளி விழாக் காணும் இந்நேரத்தில் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்

10-8-80

**அறிவகம் சனசமூக நிலையம்.**

# வெள்ளி விழாக் காணும் அறிவகம் வாழ்க!

(வளலாயூர் செ. சிவசம்பு)

அறியாமை இருளகற்றி அறிவொளியைப் பரப்புவதே
குறிக்கோளாய்க் கொண்டெழுந்த அறிவகமே யுன்பணியால்
சிறியோர்கள் இவர்களென்ற சிறுமைதனை யகற்றியேநல்
நெறிநிற்போர் என்றபுகழ் ஊரவர்க்கு ஈட்டிவைத்தாய்.

துடிப்புள்ள இளைஞர்கள் துட்டத்தனம் செய்யாமல்
படிப்பதற்கு நூல்தந்து பண்புநெறி போற்றவைத்தாய்
நடிப்பதற்கு நாடகங்கள் அரங்கேற்றி நாட்டிலுள்ளோர்
கடைப்பிடிக்க வேண்டியநற் பண்புகளை ஊட்டுகின்றாய்

கண்டபடி கூடிநின்று வாலிபர்கள் வம்புசெய்ய
கண்டவர்கள் இவர்புத்தி இதுவென்றே கேலிசெய்ய
சண்டியர்கள் நாமென்று சண்டையிட்டு அழியாமல்
தொண்டியற்றும் கடமைகளை வாலிபர்க்கு உணர்த்துகின்றாய்.

வல்லாண்மை யுள்ளவர்கள் வகுத்துவைத்த சாதியினால்
செல்லாதீர் கோயிலுள்ளே எனத்தடுக்கும் தீண்டாமை
இல்லாது ஒழித்திடவும் எவ்விடத்தும் சமத்துவமாம்
நல்நெறியை நாட்டிடவும் போரிடுவாய் அறிவகமே

சீதனமாம் கொடுமையினால் சீரழியும் பெண்குலத்தின்
வேதனைகள் துடைத்தவர்க்கு வாழ்வுதரும் துணிவுடனே
சாதனைகள் செய்யவல்ல சால்புடைய வாலிபரை
போதனையால் படைத்திடவும் பணிபுரிவாய் அறிவகமே!

தெள்ளுதமிழ்க் கலைவளர்த்து சேவைபுரி உளம்கொடுத்து
அள்ளியருள் முருகையன் அடிபணிவோர் தொகைபெருக்கி
எள்ளிநகை செய்தோரும் ஏற்றிடவே பணிபுரிந்து
வெள்ளிவிழாக் காண்கின்ற அறிவகமே வாழ்க வாழ்க!

மங்கையர் உள்ளங்களில்

மங்காமல் நிலைத்திருப்பது

★ ராஜி ரெக்ஸ்ரைல்ஸ் ★

திருமணப் பட்டுப் பிடவைகள்

தங்களுக்குத் தேவையான நவீன டிசைன்களில்

புதிய ஜவுளித் தினிசுகளைக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள

சிறந்த இடம்

# ராஜி ரெக்ஸ்ரைல்

பஸ் நிலையம் முன்பாக, ★ நெல்லியடி.

தொலைபேசி இல: 801

---

# VIJI JEWELLERS

Prop: R. THANGARAJAH

MAIN STREET. NELLIADY. KARAVEDDY.

அழகுக்கு அழகூட்டும்

அழகிய ஆபரணங்கட்கு

# விஜி ஜூவெல்லர்ஸ்

பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.

உங்களுக்கு வேண்டிய
சகல பலசரக்கு வகைச்
சாமான்களுக்கும்

நம்பிக்கையுடன் நாடவேண்டிய
மளிகைக் கடை

**நந்தினி ஸ்ரோர்ஸ்**

பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

பொருட்களை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
சகாய விலையில் பெறலாம்

உரிமையாளர்: க. சுப்பிரமணியம்



தரமான
பலசரக்குப் பொருட்களுக்கு
நாடுங்கள்

**ராஜா ஸ்ரோர்ஸ்**

பிரதான வீதி,
நெல்லியடி.



சகல விதமான

- புத்தகங்கள்,
- சஞ்சிகைகள்,
- பரீட்சை வினாவிடைகள்

ஆகிய வற்றைப்
பெற்றுக் கொள்ளச் சிறந்த இடம்

↓

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம்.



பருத்தித்துறையில்
புகழ் பூத்த ஸ்தாபனம்

**பொன்னுச்சாமி அன் சன்ஸ்**

சகல விதமான மோட்டார்
உதிரிப் பாகங்களுக்கும்
நாடுங்கள்

**மு. பொன்னுச்சாமி**
**அன் சன்ஸ்**

பருத்தித்துறை.

உரிமையாளர்: மு. பொ. வீரவாகு

# பொன்விழாக் காண்க.

**(விருசித்தம்பி சேதுநாயகம்)**

ஆசிரியப்பா.

ஆன்றமைந் தடங்கிய அறிஞர்கள் நடத்தும்
அறிவகம் வளர்க! அறிவகம் வளர்க!
புலோலியின் தெற்கில் கிராமசே வகராய்
கடமை ஆற்றிய காலந் தொட்டு
ஏருடை அறிவக நிலையத் துடனே
ஏழிரு வருடமாய் இணைந்திருக் கின்றேன்
அம்பனும் ஊர்க்கும் அகன்றதும் பளைக்கும்
மாற்றலு மாகி வந்த காலையும்
தொட்ட தொடர்பு விட்டேன் அல்லேன்
ஆண்டு விழாக்களில் அரிய நிகழ்ச்சியில்
கலந்தே வந்தனன் கலப்பதும் மறவேன்
எண்ணம் சேவை இயற்றிடும் அறிவகம்
எவ்வித ஊழலும் இன்றி இயங்குமே
இயற்றிடும் கருமம் யாதே யாயினும்
என்னுடன் கலவா தியற்றுரர் இயக்குநர்
மாற்றலாகி மற்றோர் ஊர்க்கு யான்
பிரிந்த ஞான்று பிரிவுப சாரம்
நடத்திக் கௌரவம் கொடுத்த சிறப்பினை
மறவேன் மறவேன் மண்ணில்வாழ் மட்டும்
ஐயைந் தாண்டாய் அறிவகம் வளர்ந்து
வெள்ளி விழாவினை விரும்பிக் காணும்
பக்குவம் வந்தது பெரும்பே றுகும்,
கடமை கண்ணியம் கட்டுப்பா டென்னும்
ஒழுக்கின் வந்த ஓங்கறி வகமே
வாழி நீடூழி வாழி நீடூழி
சீர்சால் பொன்விழாக் காணும்
பாக்கியம் பெற்றே வாழி பல்லாண்டே.

கி. சே. அ. அலுவலகம்,
தும்பளை,
பருத்தித்துறை.
1980-08-10

# மனோரஞ்சிதா டூர்ஸ் அன் கொம்பனி லிமிட்டெற்

உல்லாசப் பயணங்களுக்கு பஸ், கார் முதலியன
குறைந்த செலவில் ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

## பொன்ராஜா மோட்டார் ஸ்கூல்

குறைந்த செலவில் பஸ், கார், லொறி, மோட்டார் சைக்கிள் ஆகிய எல்லா வாகனங்களுக்கும் சாரதி அனுமதிப்பத்திரம் குறித்த தவணையில் பெற்றுத்தரப்படும்.

உடன் தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்:

**பொன்ராஜா மோட்டார் ஸ்கூல்**

22, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: **640**

---

- புட்போல்
- வொலிபோல்
- றகர் போல்
- பட்மின் ரன்
- கிரிக்கட் வட்
- கரம்போட்
- கைக்கடிகாரம்
- சுவர் மணிக்கூடு
- கசட் றேடியோக்கள்
- மின்சார உபகரணங்கள்

மற்றும் அன்பளிப்புப் பொருட்கள்
சகாய விலைக்குப் பெற்றுக்கொள்ள
உடனே விஜயம் செய்யுங்கள்

## பான்சி ரேட்ஸ்

72, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: **8216**

குறிப்பு:- விளையாட்டுப் பொருட்கள்
விசேஷகழிவுடன் தரப்படும்.

---

**மந்திகையில்**

சகலவிதமான
சாய்ப்புச் சாமான்களுக்கும்
சுவைமிக்க சிற்றுண்டிக்கும்
**விஜயம் செய்யுங்கள்**

↓

## பாக்கியநாதன் கபே

மந்திகைச் சந்தி,
**மந்திகை.**

உரிமையாளர்: **வி. பாக்கியநாதன்**

# மலர்ந்த வாழ்வு

கா. தங்கராசா

( சமுதாய நாடகம் )

## திரை விலகுகிறது.

❋

## அங்கம் I

### சிவகுமாரனின் வீடு

(தங்கை வசந்தியும், தந்தை சிவகுமாரனும் வீட்டின் உள்ளே இருக்க வசந்தன் பயணத்தால் வருகிறான்)

வசந்தன்:- அப்பா ... அப்பா ...... வசந்தி — வசந்தி — அம்மா வசந்தி (வசந்தி வந்துகொண்டே)

வசந்தி:- அண்ணா இதோ வந்துவிட்டேன் அண்ணா ....

வசந்தன்:- வசந்தி அப்பா? ....

வசந்தி:- அப்பா பூசை அறையில் இருக்கிறார் அண்ணா.... —

வசந்தன்:- இந்த அண்ணன் தன் அன்புத்தங்கைக்கு என்ன கொண்வந்திருக்கிறான் சொல் பார்க்கலாம்.

வசந்தி:- போங்கண்ணா! என்னைக்கேட்டால் நீங்களே சொல்லுங்க........

வசந்தன்:- நான் சொல்லமாட்டேன் நீ சொல்லணும் இல்லை நான் சொல்கின்றபடி நடக்கணும்.

வசந்தி:- அப்படி என்ன அண்ணா நீங்க சொன்னதை மீறிட்டேன் (அழுகிறாள்)

வசந்தன்:- சே! இங்கே பாரன் சின்னப்பிள்ளை மாதிரி கதாநாயகியின் சோகத்தை

வசந்தி - போதுமண்ணா கொண்டுவந்ததை....

வசந்தன்:- கொண்டுவந்ததை தரணுமென்றால் ம்.... எங்கே கண்ணை மூடு ...

வசந்தி:- மூடியாயிற்று .... எங்கே அண்ணா! ....

வசந்தன்:- ஆ ... என்ன.... கண்ணைத் திறக்கப்படாது. (பரிசுப் பொருளைக் கொடுக்கிறான்) இனி கண்ணைத் திறக்கலாம்.

வசந்தி:- அண்ணா நல்ல அண்ணா (உள்ளிருந்து சிவகுமார் தடுமாறியபடி வரல்)

சிவகுமாரன்:- என்ன இது கூச்சல்! வந்ததும் வராததுமாய் வசந்தியோடு சிலேடைப் பேச்சும் கும்மாளமும் தான் ... போய் உடையை மாற்றி குளித்திட்டு வா வசந்தன் ....

வசந்தன்:- அப்பா வந்து! ......

சிவகுமாரன்:- டே வந்தும் வராமலும் - — போடா என்றால் ——
(போகிறான் உள்ளே வசந்தன்)

சிவகுமாரன்:- அம்மா நமக்கெல்லாம் துணையாயிருந்து நம்மையெல்லாம் பாதுகாத்து வந்த உங்கம்மாவும், தாத்தாவும் கண்ணை மூடிவிட்டாலும் உனக்கும் எனக்கும் தக்கதுணையாக நின்று உதவும் உன் அண்ணனை தூக்கி எறிந்திடாதே அம்மா — தூக்கியெறிந்திடாதே......

வசந்தி:- அப்பா அப்படி நான் செய்யமாட்டேன் — தனக்காக வாழாது எனக்காக வாழும் எங்கண்ணு நம் நல் வாழ்விற்காகத்தானே பாடுபடுகிருர்.

(வசந்தன் வந்துகொண்டே)

வசந்தன்:- என்ன உபதேசம் ... பலமாய் இருக்கப்பா! ...

சிவகுமாரன்:- வசந்தி இப்போ சிறுமியில்லையடா அவள் பெரியவள் என்பது உனக்கு நன்ருகத் தெரியும் இல்லையா! அதனுலே நம்ம குடும்ப கௌரவம், வாக்கு இவற்றின்படி சீக்கிரம்......

வசந்தன்:- அப்பா!... என் தங்கை வசந்தியின் திருமணத்தை எப்படி நடத்தி வைக்கிறேன் பாரப்பா மாப்பிள்ளை உயர்தரவகுப்பு படிக்கிருன் நல்ல வேலை கிடைத்தவுடன்.

வசந்தி:- அண்ணு எனக்கு மாப்பிளை பார்ப்பது இருக்கட்டும் மணமக்களை ஆசீர்வதிப்பதற்காவது பார்த்து பூரித்து மகிழ்ச்சியடையவாவது அப்பாவிற்கு பார்வை கண்பார்வை தேவையண்ணு தேவை ...

சிவகுமாரன்:- வசந்தி என்னம்மா சொல்கிருய்...... எனக்கு இனிப்பார்வை கிடைப்பதா? அது கிடைக்காதம்மா கிடைக்காது ...

வசந்தன்:- அப்படிச் சொல்லாதீர்களப்பா என் சினேகிதனுன டாக்டர் ஒருவரின் சிபார்சுடன் கண் வைத்திய நிபுணர் ஒருவரை சந்தித்து கதைத்து விட்டேன் அவரிடம் உங்களை அழைத்துச் சென்று காண்பித்து ஆபரேசன் செய்யவே லீவு பெற்று வந்திருக்கிறேன்

வசந்தி:- உண்மையாகவா அண்ணு ......

வசந்தன்:- கடவுளின் துணையும், கருணையும் நம்பக்கமிருந்தா நமது அப்பாவின் பார்வை நிச்சயம் கிடைத்திடும் .. நான் வெளியே போய் வருகிறேன். (போகிருன் வசந்தன்)

வசந்தி:- என்னப்பா ... ஒரே சிந்தனை?

சிவகுமாரன்:- என்னம்மா சிந்தனை உன் பால்வடியும் திருமுகத்தை மீண்டும் பார்ப்பேனு என்ற எண்ணமேயன்றி வேறு ஒரு சிந்தனையும் இல்லையம்மா? ஆனந்தன் இந்தப்பக்கம் வந்தானு அம்மா

வசந்தி:- ஏதோ நேர்முகப் பரீட்சைக்குச் சென்றிட்டார் என நாகலிங்க மாமா சொன்னுரப்பா!.......

சிவகுமாரன்:- உனக்கு பசி வா அம்மா சாப்பிடலாம் .....

(இருவரும் உள்ளே செல்லுதல்)

(திரை விழுகிறது)

## அங்கம் II

(திரை விலகுகிறது)

(கண் ஆபரேசன் நடந்ததின் பின் சிவகுமாரன் படுத்த படுக்கையாக இருத்தல். அவர் அருகில் மைத்துனன் நாகலிங்கம், மருமகன் ஆனந்தன், வசந்தி என்போர்)

ஆனந்தன்:- மாமா உங்களின் பார்வை தெளிவாக வேண்டுமே அப்பாவையும், அம்மாவையும், சித்தியையும் ஒன்ருக கார்விபத்தில் ஒன்ருக இழந்து அனுதையாக நின்ற என்னை சித்தப்பாவும், நீங்களும் தான் மனிதனுக்கினீர்கள் ... ஆனல்......

நாகலிங்கம்:- என்ன ஆனுல் சிவகுமாரனுக்கு கண்கட்டு அவிழ்க்கும் போது நீ சந்தோஷப்படுவாய் கலங்காதே ஆனந்தா—— வசந்தி, வசந்தன் இங்கிருந்து போனவுடன் கடிடம் ஏதும் போட்டானு......

வசந்தி:- அண்ணு கடிதம் போட்டிருக்கார் மாமா......

நாகலிங்கம்:- சரி வசந்தி —— ஆனந்தா எப்படி மேலே படிக்கப்போகின்ருயா——....

ஆனந்தன்:- சிற்றப்பா இந்தவருடத்துடன் படிப்பு மோகத்தைவிட்டு ஒரேயடியாக விவசாயத்தில் குதிப்பதாக இருக்கிறேன்.

நாகலிங்கம்:- அட்வான்ஸ் லெவலுக்கு மேலே நீ படிக்க விரும்பவில்லையா?—— நீ விரும்பினுல் செலவுக்குப் பணம் தருகிறேன் மேலேபடி யோசிக்காதே.... அதன்பின் எனக்குத் தெரியும்

ஆனந்தன்: சிற்றப்பா இவ்வளவு நாட்களும் உங்க உதவியினுல்தான் இந்தளவாவது படிக்கமுடிந்தது. மேலும் கஷ்டப்படுத்த நான் விரும்பவில்லை. இந்த நேர சூழ்நிலையில் படித்த வாலிபர்களுக்கு உப உணவுற்பத்திக்கு நிலமெல்லாம் அரசாங்கம் கொடுப்பதை அறிந்து விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்குச் சென்றேன். காணிதருவதாக பதிவுத் தபால் வந்திருக்கு——.... சிற்றப்பா....——

நாகலிங்கம்:- அப்படியா நல்லது உன் விருப்பப்படியே செய் —....

சிவகுமாரன்:- (மெதுவாக) இன்றைய நவ இலங்கையின் முன்னேற்றத்திற்கு உன் போன்ற பல்லாயிரம் இளைஞர்களின் உழைப்பும், உறுதியும் தேவை. உன் மனமாற்றத்தை நானும் மனமார விரும்புகிறேன்.

நாகலிங்கம்:- நீ விவசாயத்தில் இறங்கி செயல்படும் போது அடுத்தவர் கேவலமாக பேசுவர். அதனைக் காது கொடுக்காது வசந்தியை மறக்காமல் உன் பாதையில் செல்....... வீட்டிற்கு வராமல் இருந்திடாதே —..... நான் வருகிறேன் சிவகுமாரன், வருகிறேன் வசந்தி........

(போகிருர் நாகலிங்கம்——.... இசை ஒலிக்கிறது)

(திரை)

## அங்கம் III

### சிவகுமாரனின் வீடு

6 மாதத்தின் பின் ஓர் நாள்

(திரை விலகுகிறது)

ஆனந்தன் வந்துகொண்டே:- மாமா——— மாமா....——

சிவகுமாரன்:- யார் அது——.... யார்....——

ஆனந்தன்:- நான்தான் மாமா....—

சிவகுமாரன்:- ஆனந்தனு வா .. வா....உட்கார். அம்மா வசந்தி....— வசந்தி——.....

வசந்தி:- (உள்ளிருந்து) என்னப்பா———

சிவகுமாரன்:- கோப்பி கொண்டு வாம்மா - ——

வசந்தி:- இதோ கொண்டுவாறேனப்பா ——

ஆனந்தன்: மாமா இப்போது கண்பார்வை எப்படியிருக்கு மாமா.......

சிவகுமாரன்:- இப்போது பார்வை தெரிகிறதுதான் என்ருலும்.... பழைய நிலைக்குவர கஷ்டமாகுமென டாக்டர்மாரெல்லாம் சொல்கிருர்கள்.

ஆனந்தன்:- கடவுளின் கிருபை இருப்பதால் உங்களுக்கு பூரணசுகம் கிடைக்கும் மாமா, பயப்பிடவேண்டாம்.

(வசந்தி கோப்பி கொண்டுவருதல். கண்பார்வையால் ஆனந்தனும், வசந்தியும் கதைத்தல்.)

சிவகுமாரன்:- என்னவிடயமாய் வந்திருக்கிருய் ஆனந்தா. கோப்பியை சாப்பிடு——
(கோப்பியை சாப்பிட்டபின்னர்) (வசந்தி உள்ளே போதல்)

ஆனந்தன்: மாமா வந்து ..

சிவகுமாரன்:- மனத்திற்குள் இருப்பதை மௌனத்திஞல் சாதிப்பதைவிட, திடமான பேச்சிஞல் சிந்தை குலேயாமல் அறியலாம். எவ்வித தயக்கமும் இன்றி சிந்தையில் இருப்பதை சொல் தம்பி —

ஆனந்தன்:- மாமா எங்கம்மாவிற்கு நீங்க கொடுத்த வாக்குப்படி வசந்தியை பெண்கேட்டு வந்திருக்கிறேன். நல்ல உள்ளத்துடன் நல்ல முடிவு சொல்லுங்கள்.

சிவகுமாரன்:- ஆனந் வாக்குத்தவறி வாழ்வது வாழ்வல்ல என்மகளே வேறு யாருக்கு நான் கொடுப்பது.... என் தங்கை சிவகாமியின் செல்வ மகன் நீ.... சிந்தை குளிர்ந்த என் செல்வமகன் வசந்தன் ஊரோடு வந்திருக்கான்... அவன் வார்த்தையும் கேட்டு ......

வசந்தன்:- (வசந்தன் வந்து கொண்டே) அப்பா சகலமும் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். கேட்பதற்கு என்ன இருக்கிறது ....

சிவகுமாரன் - எப்படியாகிலும் என்மகனல்லவா? என் விருப்பப்படிதான் நடப்பான். இல்லேயா ஆனந் ...

வசந்தன்:- என்ன சொன்ஞய் முட்டாள் .. ....

சிவகுமாரன்:- டே வசந்தன் என்ன இது ....
(வசந்தன் ஆத்திரமிகுதியால் ஆனந்தனே அடிக்கவரும் போது, தடுத்த தந்தையை தள்ளிவீழ்த்திவிடுகிருன் உள்ளே இருந்து ஓடிவரும் வசந்தி)

வசந்தி:- ஐயோ அப்பா ...

ஆனந்தன்:- மாமா .... (தூக்குதல்)

வசந்தி:- பெற்ற அப்பாவை இப்படியா செய்வதண்ணு அத்தான் எங்க வாழ்வு வளம் பெருது ... நீங்க சென்று வாருங்கள். எங்கேயென்ருலும் நன்ருய் வாழுங்கள்.

வசந்தன்:- பொத்தடிவாய் வாழ்வு வளம் இவைபற்றி இவனுக்கு என்ன தெரியும்

ஆனந்தன்:- எனக்கா தெரியாது உத்தியோகம் என்று உதவாத பழக்கவழக்கங்களே கைக்கொண்டு உற்ற தந்தையையே கொல்லத்துணியும் பேயனே என் உள்ளக்கதறல் உனக்கு நல்லா தெரியுதா நீ மனிதஞ?

வசந்தன்:- அர்த்தமில்லாமல் பேசாதே நான் பப்பாமரமில்லே பாதியில் முறிந்து விழ ... வைரமரம் தெரிந்ததா.... ..

ஆனந்தன்:- நீ வைரமரமாய் நிமிர்ந்து நிற்கலாம் தென்றல் வீசும்போது அதே தென்றல் புயலாய் மாறி வீசும் போது கிளே உடைஞ்சு வேரோடுசாயும் இதனே நீ சர்வசாதாரணமாக பார்க்கத்தான் போகிருய்

வசந்தன்:- உபதேசமா செய்கிருய் இதனே உன் மிளகாய்க் கன்றுக்குபோய் உபதேசம் செய் எனக்கு உன் உபதேசம் தேவையில்லே நீ பார்த்திருக்கவே இந்தப் புகைப்படத்திலுள்ள சந்திரனே வாறவாரமே என் தங்கைக்கு திருமணம் செய்து வைக்கிறேன்

சிவகுமாரன்:- நான் இருக்கும் போது நீ என்மகளுக்கு திருமணம் செய்வதா? .. ....

ஆனந்தன்:- மாமா! ... அவன் செய்வதை செய்யட்டும் எனக்காக உங்க குடும்பம் குலேயவேண்டாம் நான் வருகிறேன்.
(ஆனந்தன் போகிருன்)

வசந்தி:- அப்பா இது என்ன கொடுமையப்பா என்வாழ்வை ஏன் அப்பா இப்படி பாழ்படுத்துகிறீர்கள். எல்லேயில்லா இன்பத்தில் மிதப்பேன் என்று

கனவு கண்டேன் இன்று தொல்லையும், துயரமும் சூழ்ந்த வாழ்வையா எனக்குத் தரப்போகிறீர்கள்.
(நாகலிங்கம் வருதல்)

சிவகுமாரன்:- அம்மா நான் என்னம்மா செய்ய.... மக்களை இந்த அந்தகன் கண்ணைப் போல செல்லம் கொடுத்து வளர்த்திட்டேன். அதனால் இன்று செல்லாக் காசாகி நிற்கிறேன்.

வசந்தன்:- பெண்ணைப் பெற்ற அப்பனாகவா இருக்கிறீங்க——

வசந்தன்:- உங்க விருப்பம் என்னப்பா! ——

சிவகுமாரன்:- விளையாடுகிறாயாடா!

வசந்தன்:- விளையாட நேரம் இதுவல்ல தந்தையே விளக்கந்தான் தேவை...

சிவகுமாரன்:- வசந்தியை ஆனந்தனுக்கு கொடுப்பதாக செத்துப்போன உன் அத்தை சிவகாமியிடம் சத்தியம் செய்து சொன்ன விடயம் அதன்படி இப்போது செய்ய நேரம் நெருங்கிவிட்டது.

வசந்தன்:- செத்துப்போன அத்தை சிவகாமிக்கு கொடுத்த வாக்கு செத்துவிட்டது பழையது பழையதுதான். இனி புதிய பாதையை அமைக்க வேண்டும் அப்பா ——

சிவகுமாரன்:- நீ என்ன சொல்கிறாய் வசந்தன்——....

வசந்தன்:- எங்களிடம் பெண்கேட்டு வருவதற்கு இவனுக்கு என்ன தகுதியிருக்கு தரமான படிப்புண்டா? தகுதியான உறவினர் உண்டா? தகமையான பணமுண்டா? இல்லை உயர்வான உத்தியோகம் உண்டா? எது உண்டு இவனுக்கு இந்த லட்சணத்தில் என் தங்கை மட்டும் வேண்டும்.....——

சிவகுமாரன்:- வசந்தன்!!——

ஆனந்தன்:- மாமா! அத்தான் இன்னும் பலவற்றைக் கேட்கட்டும் அமைதியாக இருங்கள்.

வசந்தன்:- சத்தான மொழிதனில் அத்தான் என என்னை அழைப்பதில் உனக்கு வெட்கமாய் இல்லை. ஏதோகாட்டுப் பகுதியில் காணியெடுத்து கஷ்டப் படும் உனக்கு என் தங்கை மனைவியாகணுமா?——— கனவிலும் என் தங்கை உனக்கு மனைவியாக மாட்டாள். அவளை மறந்துவிடு ...——

ஆனந்தன்:- பேசிவிட்டாயா? இன்னும் பேச்சு உண்டா?

சிவகுமாரன்:- அவன் பேசியதை ஆனந் மனதிலை எடுத்திடாதே.

வசந்தன்:- அப்பா ... நீங்க ஏழையின் கையில் என் தங்கையை நான் இருக்கும் வரையில் ஒப்படைக்க மாட்டீர்கள். நான் என் உத்தியோக நண்பனுக்கு வாழ்க்கைத் துணைவி ஆக்கப்போகிறேன் என் தங்கை வசந்தியை——....

சிவகுமாரன்:- எனக்கு முன்பு பிறந்து விட்டாயா?

வசந்தன்:- இது என் சொந்த விடயம் அப்பா! உங்க மகனிடம் உங்கட்கு பிரியமில்லாவிட்டால் நீங்க நினைத்தபடி நடத்துங்க ஆனால் இந்தப் பிச்சைக்காரப் பயலுக்கு என் தங்கையை தாரமாக்கிடாதீர்கள்.

ஆனந்தன்:- வசந்தன் வார்த்தைகளை அளந்துபேசு வாழ்வில்லை என்றாய் பொறுத்துக் கொண்டேன், வறுமையென்றாய் அதனையும் பொறுத்துக்கொண்டேன்— உயர்வான உத்தியோகம் இல்லையென்ற பிச்சைக்காரப் பயலென்றாயே இனிப் பொறுப்பதற்கு என்ன இருக்கிறது. என் காதல் பாட்டாளியின் காதலடா கயவனே_ .... தந்தையின் சொல்லைமீறி சதுராடும் பித்தனே நீ பணப்பேய்...._

நாகலிங்கம்:- டேய் என்னடா பேசுறாய். நீ ஏதாவது அர்த்தமிருக்கா தன்மானமில்லாது வளர்ந்திட்டாய் அதனால் அறிவு கெட்ட சொல்லைவீசும் அறிவு இல்லாதவனே நாட்டின் உயர்விற்காக உழைப்பவனை நீ தூக்கியெறியவில்லை உன் தங்கையின் வாழ்வையுமல்லவா அழிக்கிறாய்.... நாளை உன்தவறை உணரத்தான் போகிறாய் நான் வருகிறேன்.

வசந்தன்:- மாமா —

நாகலிங்கம்:- மாமாவா? யார் உனக்கு மாமா என் ஆனந்தனை வேண்டாத நான் உனக்கு மாமாவா? உன் தங்கையின் வாழ்வை திசை மாற்றும் நன்றிகெட்டவனே நான் வர்றேன்.

வசந்தன்:- அப்பா நானும் வர்றேன் ...

வசந்தி:- அப்பா அண்ணாவைக் கூப்பிடுங்கள் ..

சிவகுமாரன்:- எங்கே போயிடப்போகிறான் வந்திடுவான் அமைதியாக இரம்மா...... நான் நாகலிங்கத்தைச் சந்தித்து உனது அத்தானை அழைத்து வருகிறேன். (போகிறார் சிவகுமாரன்)

வசந்தி:- அப்பா அத்தானை அழைத்து வந்தால் அண்ணா கோபப்படுவாரே.... அண்ணா தன் நண்பரை கூட்டிவந்தால் அப்பா ஆத்திரப்படுவாரே.... நான் இனி வாழவே கூடாது என் வாழ்வு அழிந்து விடுமுன் ... நான் வாழவே கூடாது (உள்ளே ஓடி பின் வெளியே வருகிறார் வசந்தி)

வசந்தி:- அப்பா ... என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் கண்பார்வை குறைந்த இந்தக் கடைசி நேரத்தில் உங்களைத் தவிக்கவிட்டு நான் செல்கிறேன் என் இதயங் கவர்ந்தவரே நாம் எப்படி இன்பமாக வாழலாம் என்று கனவு கண்டோமோ அது அண்ணனால் தடையாகி விட்டது இனி எனக்கு வாழ்வு தேவையில்லை (அழுகிறாள்) வாழ்வு தேவையேயில்லை (போத்தலைத் திறந்து மருந்து குடிக்க எடுக்கும் போது ஆனந்தன் வந்து பறித்தல்)

வசந்தி:- விடுங்க என்னைச் சாகவிடுங்கத்தான் தங்களை வாழ்விலே இணைய முடியாத நான் சாவிலே ஆவது நிம்மதியைக் காணப்போகிறேன் விடுங்க (அழுகிறாள் வசந்தி)

ஆனந்தன்:- பொல்லாத உன் அண்ணனின் போக்கினால் நீ இப்படி ஏதாவது செய்து விடுவாயோ என நினைத்துத் துடித்தேன். நாளை கமத்திற்குப் போகப் போகிறேன் தைரியமாக இரு எனக் கூறி சென்றுவிட நினைத்து வந்த நான் உன்னை இந்த நிலையில் காண்பேன் என கனவிலும் நினைக்கவில்லையே வசந்தி.... கனவிலும் நினைக்கவில்லை

வசந்தி:- அத்தான் உங்க முகம் பார்த்து மகிழ்ச்சியடையலாம் என நினைத்தேன்

ஆனந்தன்:- இனி தடை உண்டோ அதற்கு நிமிர்ந்த நன் நடையும், நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்குமஞ்சாத திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால் பெண்கள் திறம்புவதில்லை என பாடிய பாரதியின் கவிதையைப் படித்த நீயுமா வசந்தி வாழ்வே பிடிக்காமல் விஷம் உண்டு பிணமாக நினைத்தாய் இனி உன் வாழ்வு மலர்ந்து மணம் பரப்பும் மலர் . எந்த எதிர்ப்பைக் கண்டும் இனி ஓடிவிடமாட்டாய் அல்லவா! மலர்ந்த வாழ்விழ் மகிழவேண்டிய நீ சிதைந்த ஓவியமாய் மறைய இருந்தாயே

வசந்தி:- அத்தான் என்னை மன்னித்து விடுங்கள்.

(திரை விழுகின்றது)

(யாவும் கற்பனை)

பி. கு. (சனசமூக நிலையங்களுக்கிடையிலான 1972-ம் ஆண்டு வடமராட்சி தெற்கு மேற்கு காரியாதிகாரி பிரிவின் கீழ் நடாத்தப் பெற்ற விவசாய நாடகப் போட்டியில் சமூக நாடகப் பிரிவில் முதலாம் பரிசிலைத் தட்டிக் கொண்டது இந் நாடகம்.)

# நன்றிகள்

- விழாத் தலைவர் அவர்கள்
- விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டோர்
- ஒலிபெருக்கி மின்னொளி அளித்திட்டோர்
- கரப்பந்தாட்டப் போட்டியிற் பங்கு பற்றினோர்
- விளையாட்டுப் போட்டிகளிற் பங்கு பற்றினோர்
- நிதி திரட்டித் தந்தோர், நிதி வழங்கியோர்
- மலருக்கு விளம்பரங்கள் தந்துதவினோர்
- விடயதானம் செய்தோர்
- மலரை அழகுற அச்சிட்ட குமார் அச்சகத்தார்
- மற்றும் அனைவருக்கும்

எமது உளங்கனிந்த

நன்றிகள்.

**மா. சதாசிவம்**
தலைவர்,
அறிவகம் ச. ச. நிலையம்,

**பொன். கனகசபை**
செயலாளர்,
அறிவகம் ச. ச. நிலையம்.

# அறிவகம் சன சமூக நிலையத்தின்

## அமைப்பு விதிகள்:

1. நிலையத்தின் பெயர் தொடர்ந்து அறிவகம் சனசமூக நிலையம் என இருத்தல் வேண்டும்.

2. ஆண்டு விழா வருடந் தோறும் ஆடி அமாவாசைத் தினத்திலேயே நடைபெறுதல் வேண்டும்.

3. ஆண்டு விழா மூன்று கட்டங்களாக நடைபெறுதல் வேண்டும். அவை
(1) விளையாட்டுப் போட்டி
(2) பொதுக் கூட்டம்
(3) கலை நிகழ்ச்சிகள்

4. ஆண்டு விழாவின் பின் நடைபெறும் பொதுக் கூட்டத்திலேயே புது உத்தியோகத்தினர் தெரிவு நடைபெறுதல் வேண்டும்

5. மாதாந்தம் கருத்தரங்கு, கலந்துரையாடல்கள், கொண்டாட்டங்கள், இலக்கிய சமய சரித்திர பெரியார்களின் ஞாபகார்த்த பொதுக் கூட்டம் ஏதாவது ஒன்று நடைபெறுதல் வேண்டும்.

6. நிலையத்தின் உறுப்பினர்களின் சந்தா ரூ 2/- ஆகும்.

7. நிலையப் பொதுக் கூட்டத்தின் நிறை எண் 30 ஆகும். நிர்வாக கூட்டத்தின் நிறை எண் 7 ஆகும்.

8 சந்தா ஒழுங்காகச் செலுத்தாதவர்கள் வாக்களிச்சவும், நிர்வாகத்தில் பதவி வகிக்கவும் அருகதை அற்றவராக இருத்தல் வேண்டும்

9 நிர்வாகத்தைப் பரவலாக்கி ஒவ்வொரு நிர்வாகப் பிரிவுக்கும் ஒவ்வொரு நிர்வாக சபை உறுப்பினரை பொறுப்பாக்கிச் செயற்படுதல் அவசியம்.

10 நிலைய உறுப்பினர்கள் சகலரும் சேர்ந்து வருடத்தில் ஒரு முறை கட்டாயம் சிரமதானம் செய்தல் வேண்டும்.

11. நிலையத்தின் வாசிகசாலையும், நூல் நிலையமும் பொது மக்களுக்குப் பயனுள்ளதாக இருத்தல் வேண்டும்.

12 நூல் நிலையப் புத்தகங்கள் இலக்கமிடப்பட்டு ஒழுங்காக இருத்தல் வேண்டும்.

13 கூட்ட அறிவித்தல்களிலும், கடிதங்களிலும் செயலாளரின் கையொப்பத்துடன் தலைவரின் கையொப்பமும் இடம் பெறுதல் வேண்டும்.

14. ஆக்கப்பட்ட விதிகளுக்கு மாறுபாடாக நிர்வாகம் செயற்பட்டால் பொதுக்கூட்டம் கூட்டுமாறு பொது உறுப்பினர் 15 பேர் சேர்ந்து நிர்வாகத்தைக் கேட்க உரிமை உண்டு

15. பொது உறுப்பினர் 15 பேர் கையொப்பமிட்டு கூட்டம் கூட்டுமாறு கேட்டால் நிர்வாகத்தினர் மூன்று நாட்கள் அவகாசத்தில் பொதுக் கூட்டம் கூட்டுதல் வேண்டும்.

16 கூட்ட அறிவித்தல்கள் 3 நாட்களுக்கு முன்பு அறிவித்தல் செய்யப்பட வேண்டும்.

17 பொதுக் கூட்டத்திலேயே புதிய விதிகள் ஆக்கப்படுதல் வேண்டும். விதிகளின் சாரம் மூன்று நாட்களின் முன் விளம்பரப்படுத்துதல் வேண்டும்.

18. ஆக்கப்பட்ட அமைப்பு விதிகளை புறக்கணிக்கவோ அன்றி அழிக்கவோ எந்த நிர்வாகத்துக்கும் அதிகாரம் கிடையாது. பொதுக் கூட்டத்திலேயே தேவையற்றவற்றை நீக்க உரிமை உண்டு

19. ஒவ்வொரு நிருவாகசபைக் கூட்டத்துக்கும் சமுகம் அளித்த நிர்வாக உறுப்பினரிடம் கையொப்பம் கையொப்பம் பெறுதல் வேண்டும்.

20. பத்திரிகை, சஞ்சிகை தொடர்ந்து எடுத்து வாசிகசாலேக்கு கொடுக்கும் உறுப்பினர்களிடம் சந்தா அறவிடக் கூடாது.

21. நிர்வாகசபைக் கூட்டங்களில் தீர்மானிக்கப்படும் முக்கிய தீர்மானங்கள் பொது உறுப்பினர்களின் பார்வைக்காகப் விளம்பரப்பலகையில் போடுதல் வேண்டும்.

22. நிர்வாகசபைக் கூட்டங்கள் ஆகக்குறைந்தது மாதம் ஒரு தடவையாவது கூட்டப்படவேண்டும்.

★

---


# ஸ்ருடியோ நாதன்'ஸ்

யாழ்வீதி, — நெல்லியடி.

**புகைப்படப் பிரியர்களே!**

நீங்கள் புகைப்படம் பிடிப்பதற்கு விஜயம் செய்யுங்கள்
எமது ஸ்தாபனத்திற்கு
குறித்த நேரத்தில் குறைந்த சலாரில் நவீன முறையில்
பின்னணிக் காட்சிகளுடன் புகைப்படங்கள்
எடுத்துக்கொடுக்கும் ஒரே ஒரு ஸ்தாபனம்தான்

**★ ஸ்ருடியோ நாதன்'ஸ் ★**

---

**எல்லா சைக்கிள் உபகரணங்களும், விளையாட்டு சாமான்களும்,**
**பரிசுப் பொருட்களும் பெற்றுக்கொள்ள**

# இ. என். எஸ். அன் சன்ஸ்

# E. N. S. & SONS

நெல்லியடி. கரவெட்டி.

**Nelliady.** **Karaveddy.**

அன்பளிப்பு:

குமார் அச்சகம்
பருத்தித்துறை.

முதல் தரமான

அழகிய
தங்க

ஆபரணங்களுக்கு

நெல்லியடியில்
சிறந்த இடம்

சாந்தி
ஜுவல்லர்ஸ்

மெயின் வீதி,
நெல்லியடி, - கரவெட்டி.

உரிமையாளர்:
இ. தர்மலிங்கம்.

எம்மிடம்:-







சகல விதமான
சைக்கிள்களும்
அதன் உதிரிப்பாகங்களும்

பல விதமான
றேடியோக்களும்
அதன் உதிரிப்பாகங்களும்

**ஜோன்சன் அவுட்போட் மோட்டர் யந்திரங்களும்**
அதன் உதிரிப்பாகங்களும

பல விதமான டெலிவிசன்களும்
உபகரணங்களும

சுவர்
மணிக்கூடுகளும்,
கைக்
கடிகாரங்களும்



மற்றும் பல விதமான
பொருட்களும்
சகாய விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.

# ராஜன் சைக்கிள் வேக்ஸ்

உரிமையாளர்: பொ. இராசதுரை

14, பிரதான வீதி, பருத்தித்துறை.

குமார் அச்சகம்—பருத்தித்துறை.